**விடை :** சூறாவளியின் போது மேல் மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பி**த்தான்**.

## பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க

1. நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல

**விடை :** மாணவனும் நாவன்மை மிக்கவனாய் விளங்கினான்.

2. தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.

**விடை :** தாயின் அரவணைப்பு பூங்கொடிக்கு மகிழ்வைத் தந்தது.

3. மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.

**விடை :** இன்சொற்களால் இனிமையான மனிதன் ஆனான்.

4. கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.

**விடை :** சொல்லிக் கொடுப்பதால் தன் அறிவில் குறைந்து விட மாட்டான்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## வடிவம் மாற்றம் செய்க

**நீர்ச் சுழற்சி குறித்த கருத்து விளக்கப்படத்தின் உட்பொருளை புரிந்துணர்ந்து பத்தியாக மாற்றி அமைக்க.**



சுற்றுச் சூழலின் ஒரு முக்கியப் பகுதிப் பொருள் நீர் ஆகும். இது அனைத்து உயிரினங்களையும் மிகவும் இன்றியமையான ஒன்றாகும். மிகப்பெரிய நீர்த்தேக்கங்களாக (நீர் நிலைகள்) விளங்கக்கூடிய பெருங்கடல்களில் இருந்து நீர் ஆவியாகி மேகங்களைத் தோற்றுவிக்கின்றன. மற்ற நீர் நிலைகளான ஆறுகள், ஏரிகள், குளங்களில் இருந்தும் நீர் ஆவியாகி மேகங்களைத் தோற்றுவிக்கிறது. பயிர்களில் தங்கியுள்ள நீர் ஆவியாகி வளி மண்டலத்தை அடைகிறது. மேகங்களில் உள்ள நீராவி குளிர்ச்சி அடைந்து மழையாகப் பொழிகிறது. மழைநீர் ஆறுகள் மூலமாகச் சென்று இறுதியில் கடலை அடைகிறது. மேலும் பனி மற்றும் உறைபனியில் உள்ள நீர் உருகி ஓடைகள் மற்றும் ஆறுகள் மூலமாக இறுதியில் கடலை அடைகிறது.

---

**1. உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.**

18.07.2019,
வ.உ.சி. நகர்,
திருவில்லிபுத்தூர்.

அன்புள்ள நண்பன் மணிக்கு,

நான் இங்கு நலமாய் உள்ளேன். உன் நலம் அறிய ஆவலாக உள்ளேன். மணி எப்படி இருக்கிறாய்? நீ புதியதாய் சேர்ந்த பள்ளி உனக்கு சிறப்பாக உள்ளதா? என்னுடைய பிறந்த நாளுக்கு நீ வராதது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இருப்பினும், நீ அனுப்பிய "கால் முளைத்த கதைகள்" என்ற நூல் நீ என்னுடன் இருப்பது போல் இருந்தது.

மணி! பிறந்தநாள் என்றாலே இனிப்புகளும், வாழ்த்து அட்டைகளும், குறுந்தகவல்களும் நம் நினைவில் நீங்காது நிற்கும். ஆனால், அவையெல்லாம் நீ கொடுத்த நூலிற்கு ஈடாகுமா? "நூலறிவே ஆகுமாம் நுண்ணறிவு" என்பதை உணர்ந்து என் அறிவு வளர நீ அளித்த பரிசு என் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளது.

நண்பா! "கால் முளைத்த கதைகள்" என்ற நூலில் உள்ள ஒவ்வொரு கதைகளுமே அறிவுக்கு விருந்தாகவும், நன்னெறி காட்டும் பாதையாகவும் அமைந்துள்ளது. எனது ஞானத்தை வளர்த்திட இந்நூல் இருக்கும் என நம்புகிறேன்.

நண்பா! உன்னை நேரில் பார்த்து வாழ்த்து சொல்ல வேண்டும் என எண்ணினேன். இயலவில்லை. ஊருக்கு வரும் பொழுது சந்திக்கிறேன். மிக்க நன்றி நண்பா!



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.penguinbooks.in

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இடம் : திருவில்லிபுத்தூர் இப்படிக்கு

நாள் : 18.07.2019 உன் ஆருயிர் நண்பன்,

முத்தமிழன்.

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்**

இரா. மணி,
67/ 3 ஏ, அண்ணா நகர்,
சீவலப்பேரி,
திருநெல்வேலி.

---

## வரவேற்பு மடல்

சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

இடம் : அரசு மேல்நிலைப் பள்ளி, விருதுநகர்.

நாள் : 23.07.2019 செவ்வாய்க் கிழமை.

நேரம் : பிற்பகல் 3.30 மணி.

**"சுத்தம் சோறு போடும்"**

**"கந்தையானாலும் கசக்கிக் கட்டு"**

**"கூழானாலும் குறித்துக் குடி"**

என்னும் பழமொழிக்கு ஏற்ப எங்கள் பள்ளி சிறப்பாக அமைந்துள்ளது. தூய்மையே எங்களின் தாரக மந்திரம். நெகிழிப் பயன்பாடு எங்கள் பள்ளியில் தடைசெய்யப்பட்டுள்ளது. மக்கும் குப்பை, மக்கா குப்பைகளுக்கு என தனித் தனி தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. கழிவுகளுக்கும் தனித் தொட்டிகள் உள்ளன. இயற்கை உரம் தயாரித்து எங்கள் பள்ளியில் உள்ள தோட்டங்களைப் பராமரிக்கிறோம். மாவட்டத்தில் சிறந்த பள்ளியாக எம் பள்ளியைத் தேர்ந்தெடுத்து விருது பெற்றுள்ள இப்பெரு விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்கும் வணக்கத்திற்கும் போற்றுதலுக்குரிய மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களே!

நேரிய பார்வையும், நிமிர்ந்த நன்நடையும் கொண்டவரே! கடமை உணர்வுடன், உழைப்பைத் தன் உடைமை ஆக்கியவரே! மாவட்டம் கல்வியில் சிறந்தோங்கிட இராப்பகலாய் உழைத்தவரே! குப்பைகளைப் பக்குவமாய் பிரித்துப் பயன்படுத்த நல்வழி காட்டிய அன்னப் பறவையே!

ஏழை மாணவர், மெல்லக் கற்கும் மாணவர் வாழ்விலும் ஒளி ஏற்றிட, சிகரம் தொட்டிட சீரிய வழி சமைத்தவரே! எம் மாவட்டக் கல்வி அலுவலரே! உம்மை எங்கள் பள்ளியின் சார்பில் வருக! வருக! என உளம் மகிழ வரவேற்கிறோம்.

நன்றி.

இவண்,
இரா. மணிமாறன்,



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பள்ளிக்குழு மாணவர் தலைவர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
விருதுநகர்.

## நயம் பாராட்டுக

**கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்**
**காடும் செடியும் கடந்துவந்தேன்;**
**எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்**
**இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.**
**ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல**
**ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;**
**ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்**
**ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.**
**- கவிமணி .**

**திரண்ட கருத்து :**

**"தென்னைக்கு அழகு குருத்து**
**பாடலுக்கு அழகு கருத்து"**

கல்லுகளிலும் மலைகளின் உச்சியிலிருந்தும் குதித்து வந்தேன். காடுகளிலும் செடிகளிலும் கடந்து வந்தேன். சமவெளிகளில் இறங்கித் தவழ்ந்து வந்தேன். மேட்டுப் பகுதிகளிலும் ஏறி வந்தேன். பல ஏரி, குளங்கள் நிரம்பி மக்கள் பயன்பாட்டிற்காக வந்தேன். ஊற்று வராத நிலப்பகுதிகளிலும் உள்ளே புகுந்து வந்தேன். ஓடை மணல்களில் எல்லாம் ஓடிப் பாய்ந்து வந்தேன் என்று கருத்து மிக்க பாடலைக் கவிமணி அவர்கள் இயற்றியுள்ளார்.

**மையக் கருத்து :**

மலை உச்சியிலிருந்து புறப்பட்டு ஆறு வழியாக ஓடைகளில் பொங்கிட ஓடிவந்தேன் என்று ஆற்றின் வரலாற்றை வரிசையாகக் கூறி வளப்படுத்திய பகுதிகளை சிறப்பாகக் கூறியுள்ளார்.

**தொடை நயம் :**

**"தொடையற்ற பாட்டு நடையற்று போகும்"**

என்னும் முதுமொழிக்கேற்ப இப்பாடலில் மலர்களை மாலையாகத் தொடுப்பதுபோல் மோனை, எதுகை, இயைபு, முரண் நயங்கள் சிறப்பாக அமைந்துள்ளன.

**அ) மோனை நயம் :**

**"குயவனுக்குத் தேவை பானை**
**புலவனுக்குத் தேவை மோனை"**

சீர் அல்லது அடி தோறும் முதல் எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது மோனை நயமாகும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **எ.கா :** | கல்லும் | - | காடும் | எல்லை | - | எங்கும் |
| | ஏறாத | - | ஏறி | ஊறாத | - | ஊற்றிலும் |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**ஆ) எதுகை நயம் :**

**"மதுரைக்கு அழகு வைகை**
**பாடலுக்கு அழகு எதுகை"**

சீா் அல்லது அடி தோறும் இரண்டாம் எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது எதுகை நயமாகும்.

**எ.கா :** கல்லும் | ஏறாத
எல்லை | ஊறாத

**இ) இயைபு நயம் :**

செய்யுளில் அடுத்த அடுத்த சொல்லோ, அடியின் கடைசிச் சீரோ, எழுத்தோ, அசையோ ஒன்றுபோல் இயைந்து வருவது இயைபு நயமாகும்.

**எ.கா :** கடந்து வந்**தேன்** | தவழ்ந்து வந்**தேன்**
நிரம்பி வந்**தேன்** | ஓடி வந்**தேன்.**

**ஈ) முரண் நயம் :**

செய்யுளில் முரண் பட்ட சொற்கள் அமையப் பெறுவது முரண் நயமாகும்.

**எ.கா :** இறங்கி - ஏறி

**சொல் - பொருள் நயம் :**

**"அர்ச்சுனனுக்கு வில்லு**
**பாடலுக்குச் சொல்லு"**

இச்செய்யுளில் சொல்லும் பொருளும் சிறப்பாக அமைந்துள்ளன. ஆற்றின் போக்கிற்கேற்ப பாடல் அமைத்துள்ளார்.

**சான்று :** குதித்து வந்தேன் - தவழ்ந்து - ஓடி - சமவெளி

**சுவை நயம் :**

**"நாவிற்கு அறுசுவை**
**பாவிற்கு எண்சுவை"**

என்பதற்கேற்ப இச்செய்யுளில் 'தவழ்ந்து தவழ்ந்து' என்று அடுக்குத் தொடராக அமைந்து சுவை நயமிக்க பாடலாக அமைந்துள்ளது.

**சந்த நயம் :**

**"சந்தம் பாட்டுக்குச் சொந்தம்"**

செய்யுளில் மோனை, எதுகை, இயைபு, முரண் நயங்கள் அமையப் பெற்று பாடல் சந்த நயத்துடன் பாடுவதற்கு ஏற்ப அமைந்துள்ளது சிறப்பாகும்.

**அணி நயம் :**

**"அணியற்ற பாடல் அழகற்றுப் போகும்"**

புலவர் ஆறு தன் பெருக்கெடுத்து ஓடி வரும் நிலையைப் பற்றி இயல்பாக இருப்பதை உள்ளதை உள்ள வாரே கூறியுள்ளதால், இப்பாடல் இயல்பு நவிற்சி அணி அமைந்து வந்துள்ளது.

**பாடலுக்கு ஏற்ற தலைப்பு :**

**"தலைப்பில்லாக் கவிதை**
**தாயில்லாப் பிள்ளை போல"**

இச்செய்யுளுக்கு ஏற்ற தலைப்பு "நீரின் துள்ளல்".



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மொழியோடு விளையாடு

### சொல்லுக்குள் சொல் தேடுக

**எ.கா :** ஆற்றங்கரையோரம் - ஆறு, கரை, ஓரம்

கடையெழு வள்ளல்கள், எடுப்பார்கைப் பிள்ளை, தமிழ்விடு தூது, பாய்மரக் கப்பல், எட்டுக்கால் பூச்சி.

கடையெழு வள்ளல்கள் - கடை, ஏழு, வள்ளல்கள், கள்.
எடுப்பார்கைப் பிள்ளை - எடுப்பார், கை, பிள்ளை, பார்
தமிழ்விடு தூது - தமிழ், விடு, தூது
பாய்மரக் கப்பல் - பாய், மரம், கப்பல்
எட்டுக்கால் பூச்சி - எட்டு, கால், பூச்சி

### அகராதியில் எழுதுக

கந்தி, நெடில், பாலி, மகி, கம்புள், கைச்சாத்து.

கந்தி - மரகதம், கழுகு, துவரை
நெடில் - நெட்டெழுத்து, மூங்கில், நீளம்.
பாலி - உதடு, தாழி, கத்தியின் பிடி, ஆலமரம்.
மகி - பூமி, பசு
கம்புள் - வானம்பாடி, சம்பங்கோழி
கைச்சாத்து - கையெழுத்து

### சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக

**எ.கா :** அரிசி போடுகிறேன்.

**விடை :**

புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் ஒருபோதும் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

1. மழை பெய்தது.
2. வானவில்லைப் பார்த்தேன்.
3. குழந்தை சிரித்தது.
4. எறும்புகள் போகின்றன.
5. படம் வரைந்தான்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



1. மழை பெய்தது :

**விடை :**

மதுரையில் மழை பெய்தது.

மதுரையில் மழை நன்றாகப் பெய்தது.

மதுரையில் நீண்ட நேரம் மழை நன்றாகப் பெய்தது.

மதுரையில் நீண்ட நேரம் மழை நன்றாகப் பெய்து வெள்ளம் ஓடியது.

**2. வானவில்லைப் பார்த்தேன் :**

**விடை :**

வானத்தில் வானவில்லைப் பார்த்தேன்.

வானத்தில் வானவில்லை நன்றாகப் பார்த்தேன்.

வானத்தில் வானவில்லை நண்பர்களோடு நன்றாகப் பார்த்தேன்.

வானத்தில் வானவில்லை நானும் நண்பர்களும் இணைந்து பார்த்தோம்.

**3. குழந்தை சிரித்தது :**

**விடை :**

குழந்தை நன்றாகச் சிரித்தது.

குழந்தை நேற்று நன்றாகச் சிரித்தது.

குழந்தை நேற்று மாலை நன்றாகச் சிரித்தது.

குழந்தை நேற்று மாலை மிக நன்றாகச் சிரித்தது.

**4. எறும்புகள் போகின்றன :**

**விடை :**

எறும்புகள் சாரைசாரையாய்ப் போகின்றன.

எறும்புகள் சுவரில் சாரைசாரையாய்ப் போகின்றன.

எறும்புகள் சுவரில் ஊர்ந்து சாரைசாரையாய்ப் போகின்றன.

எறும்புகள் சுவரில் ஊர்ந்து கொண்டே சாரைசாரையாய்ப் போகின்றன.

**5. படம் வரைந்தான் :**

வளவன் படம் வரைந்தான்.

வளவன் நன்றாகப் படம் வரைந்தான்.

வளவன் மிக நன்றாகப் படம் வரைந்தான்.

வளவன் புத்தகத்தில் மிக நன்றாகப் படம் வரைந்தான்.

## வேறுபட்ட வினையெச்சங்களைப் பயன்படுத்தி முதல் வினைகளைத் துணை வினைகளாக மாற்றுக

முதல் வினைகள் - பார்த்தேன், கொடுத்தோர், நடந்தான், சேர்ந்தார், அமைத்தோம்.

**எ.கா :** **பார்த்தேன்.**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com






அ) எழுதிப் பார்த்தேன்

ஆ) கொடுத்துப் பார்த்தேன்

இ) தடுக்கப் பார்த்தேன்

ஈ) ஓடப் பார்த்தேன்

உ) எழுதி கொடுத்தார்

ஊ) கொடுத்து நடந்தான்.

## வினையடிகளை முதல் வினையாகவும் துணை வினையாகவும் அமைத்துத் தொடர்களாக மாற்றுக

வினையடி - வா, போ, செய், மாற்று, இரு, கொடு, கொள், எழுது, விடு, போடு

**எ.கா :** வினையடி - வை

| முதல் வினை | துணை வினை |
|---|---|
| முட்டையைத் தலையில் வைத்தான்.<br>இலையில் இனிப்பை வைத்தனர். | அம்மா குழந்தையைத் தூங்க வைத்தார்.<br>நான் உனக்கு ஒரு நூல் வாங்கி வைத்தேன்.<br>எதற்கும் சொல்லி வை. |

| முதல் வினை | துணை வினை | வினையடி |
|---|---|---|
| 1. வா<br>மாணவர்கள் வகுப்பிற்கு | வந்துப் படித்தனர் | வா |
| 2. போ<br>தொழிலாளிகள் வேலைக்குப் | போய்வந்தார்கள் | போ |
| 3. செய்<br>உழவர் வயலில் வேலை | செய்து திரும்பினர் | செய் |
| 4. மாற்று<br>வங்கியில் பணத்தை | மாற்றிச் சென்றனர் | மாற்று |
| 5. இரு<br>திருடன் ஒளிந்து | இருந்தான் | இரு |
| 6. கொடு<br>வள்ளல் புலவர்க்குப் பரிசு | கொடுத்து மகிழ்ந்தான் | கொடு |
| 7. கொள் | | |



www.penguinbooks.in

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| | | |
|---|---|---|
| மாணவன் பரிசை பெற்று | கொண்டு சென்றான் | கொள் |
| 8. எழுது<br>மாணவி பாடம் | எழுதி காட்டினாள் | எழுது |

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



தன் உழைப்பில் நேர்மையாய் உள்ள
எறும்புகளைப் போல - நாமும்
நம் வாழ்வில் நேர்மையாய்
துனிச்சலோடு செயல்படுவோம்
செய்யும் வேலையில் முழு ஈடுபாட்டுடன்
கவனமாய் அவ்வேலையை முடிப்போம்
நாம் நம் வாழ்வில் வெற்றி அடைவோம்.

## செயல் திட்டம்

கொடுக்கப்பட்ட இணையத்தள இணைப்பில் உள்ள காணொலியைக் கண்டு அது குறித்த உங்கள் கருத்துக்களை இருபக்க அளவில் எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.

https : // www.youtube. com/watch?v=0ReVrONNvoQ

## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள் :**

அ) தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.

ஆ) வகுப்பறையில் நண்பர்கள் வைத்திருக்கும் புதிய அழகிய பொருள்களைப் பார்த்தால் ஆசை வரும். அவர்களைப் போல நானும் முயன்று உழைத்து அவற்றை என்னுடைய பணத்தில் வாங்குவேன்.

இ) அறையை விட்டு வெளியே செல்லும்போது மின்விசிறி, மின்விளக்குகளை நிறுத்திவிட்டுச் செல்வேன்.

ஈ) வெற்றுக் காகிதங்களைச் சுருட்டி வகுப்பறைக்குள்ளும் பள்ளி வளாகத்திலும் போடமாட்டேன்.

உ) பள்ளி வளாகத்துக்குள் ஊறு விளைவிக்க மாட்டேன்.

ஊ) ஆசிரியர்களிடத்தும் பெற்றோர்களிடத்தும் மதிப்புடன் நடந்து கொள்வேன்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| குமிழிக்கல் | - Conical Stone | பாசனத் தொழில் நுட்பம் | - Irrigation Technology |
| நீர் மேலாண்மை | - Water management | வெப்ப மண்டலம் | - Tropical Zone. |

**மறை நீர் [Virtual Water]**

கண்ணுக்குத் தெரியாமல் நாம் இரண்டு வகையில் நீரைப் பயன்படுத்துகிறோம். முதல் வகை நாம் பயன்படுத்தும் பொருள்கள் வழியாக, இரண்டாவது வகை நாம் உண்ணும் உணவின் வழியாக. புலப்படாத் தண்ணீர் என்பது உணவுப் பொருள்களின் உற்பத்தி குறித்தும் அதனை உற்பத்தி செய்யச் செலவிடப்பட்ட தண்ணீர்த் தேவை குறித்தும் பேசுவது ஆகும். ஒரு கிலோ ஆப்பிளை உற்பத்தி செய்ய 822 லிட்டா தண்ணீரும் ஒரு கிலோ சர்க்கரையை உற்பத்தி செய்ய 1780 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ அரிசியை உற்பத்தி செய்ய 2500 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ காப்பிக் கொட்டையை உற்பத்தி செய்ய 18,900 லிட்டர் தண்ணீரும் தேவைப்படுகிறது. நீர்வளத்தைப் பாதுகாக்க நாட்டின் மேல்புற நீர்வளம் மற்றும் நிலத்தடி நீர்வளம் குறித்து அக்கறை கொள்ள வேண்டும். நீர் அதிகம் தேவைப்படும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதைத் தவிர்த்து, தேவைக்கேற்ப இறக்குமதி செய்துகொள்ள வேண்டும். இதனால் நாட்டின் நிலத்தடி நீரும் ஆற்று நீரும் சேமிக்கப்படும்.

(மா. அமரேசன் - கண்ணுக்குப் புலப்படாத தண்ணீரும் புலப்படும் உண்மைகளும்)

## இயல் 2

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. உரிய விடையை எடுத்து எழுதுக. 3x1=3

1. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது ________.
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
2. 'மிசை' - என்பதன் எதிர்ச் சொல் ________.
   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை.
3. பொருத்தமான விடையைத் எடுத்து எழுதுக.
   கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ________
   அ) வந்தான் ஆ) வந்துவிட்டான் இ) வருவான் ஈ) வருகிறான்.

II. நிரப்புக 3x1=3

4. நீர்நாடு எனப் போற்றப்படும் நாடு ________.
5. உணவைத் தந்தவர் ________ தந்தவர் ஆவார்.
6. சனிநீராடு என்றவர் ________.

III. விடையளி: 4x2=8

7. 'கூவல்' என்று அழைக்கப்படுவது எது?
8. கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புகள் யாவை?
9. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்பு தருக.
10. பகுபத உறுப்பிலக்கணம் தருக : கொண்டு.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



IV. விடையளி: 3x3=9

11. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

12. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

13. சந்தையில் காய்கறிகளை வாங்கும்போது உங்களுக்கும் கடைக்காரருக்கும் நடக்கும் உரையாடலைத் துணைவினைகளைப் பயன்படுத்தி எழுதுக.

V. விடையளி: 4x5=20

14. 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

15. 'நீரின்றி அமையாது உலகு' - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை சான்றுகளுடன் விவரி.

16. சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

17. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



VI. மொழிப்பயிற்சிகள்: 7x1=7

18. துணைவினைகளைப் பயன்படுத்தி புதிய தொடரை எழுதுக.

வேண்டும்.

19. இலக்கணக் குறிப்பு தருக : விரிமலர்.

20. மொழி பெயர்க்க : Every flower is a soul blossoming in nature - Gerard De Neruval.

21. பிழை நிக்கி எழுதுக :

மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.

22. சொற்றொடரில் அமை :

மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.

23. பொருள் கூறுக : மகி.

24. கலைச்சொல் அறிக : Tropical Zone.

## இயல் 2

## அலகுத் தேர்வு 2

மதிப்பெண்கள்: 50

I. உரிய விடையை எடுத்து எழுதுக. 3x1=3

1. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) நீரின்றி அமையாது உலகு - திருவள்ளுவர்

ஆ) நீரின்றி அமையாது யாக்கை - ஔவையார்

இ) மாமழை போற்றும் - இளங்கோவடிகள்

i) அ, இ, ஆ ii) ஆ, இ, அ iii) ஆ, அ, இ iv) அ, ஆ, இ.

2. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசம் பூ இ) வளம் ஈ) பெரிய

3. 'விசனம்' சொல் தரும் பொருள் ______

அ) வேதனை ஆ) மகிழ்ச்சி இ) ஏக்கம் ஈ) கவலை.

II. நிரப்புக 3x1=3

4. திருத்தொண்டத் தொகை பாடியவர் __________.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



5. 'தாட்கு' என்ற சொல்லின் பொருள் __________.

6. தந்தி + அடி - இதில் பெயர் ______ ; வினை______.

III. விடையளி: 4x2=8

7. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

8. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

9. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண் - இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?

10. 'இரு' என்ற வினையடி கொண்டு முதல் வினை இரண்டு தொடர்களும் துணை வினை இரண்டு தொடர்களும் எழுதுக.

IV. விடையளி: 4x5=20

11. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

12. "நீர் இன்றி அமையா ..." எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

13. பாடலைப் படித்து விடை எழுதுக.

"காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்"

அ) இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
ஆ) இப்பாடலை இயற்றியவர் யார்?
இ) இப்பாடலின் எதுகைச் சொற்களை எழுதுக.
ஈ) கழை, கா - என்பதன் பொருள் யாது?
உ) நாடெல்லாம் - பிரித்து எழுதுக.

14. 'பா' நயம் பாராட்டுக :

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

V. விடையளி: 3x3=9

15. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

16. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

17. மறைநீர் - குறிப்பு வரைக.

VI. மொழிப்பயிற்சிகள்: 7x1=7

18. கலைச்சொல் எழுதுக : Water Management.

19. பொருள் கூறுக : கந்தி.

20. சொல்லுக்குள் சொல் தேடுக : பாய்மரக்கப்பல்.

21. சொற்றொடரில் அமைக்க : கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.

22. பிழை நீக்கி எழுதுக :
சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரை தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.

23. மொழி பெயர்க்க :
An early morning walk is a blessing for the whole day. - Henry David Thoreau.

24. விடைக்கேற்ற வினா அமை :
மழையே பயிர்க்கூட்டமும், உயிர்க்கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிகின்றது.

www.penguinbooks.in



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| வ.எண் | பாடல் (படைப்புகள்) | ஆசிரியர் |
|---|---|---|
| 1. | தமிழோவியம் | ஈரோடு தமிழன்பன் |
| 2. | திராவிட மொழிகளின் ஒப்பிலக்கனம் | ராபர்ட் கால்டுவெல் |
| 3. | மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும் | மணவை முஸ்தபா |
| 4. | தமிழ்நடைக் கையேடு, மாணவர்களுக்கான தமிழ் | என்.சொக்கன் |
| 5. | பட்டமரம் | கவிஞர் தமிழ் ஒளி |
| 6. | பெரியபுராணம் | சேக்கிழார் |
| 7. | புறநானூறு | குடபுலவியனார் |
| 8. | அழகின் சிரிப்பு | பாவேந்தர் பாரதிதாசன் |
| 9. | தண்ணீர் தண்ணீர் | கோமல் சுவாமிநாதன் |
| 10. | வாய்க்கால் மீன்கள் | வெ. இறையன்பு |
| 11. | மழைக்காலமும் குயிலோசையும் | மா. கிருஷ்ணன் |
| 12. | மணிமேகலை | கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் |
| 13. | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 14. | தமிழர் நாகரிகமும் பண்பாடும் | அ. தட்சிணாமூர்த்தி |
| 15. | தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் | மா. இராசமாணிக்கனார் |
| 16. | தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் பறவைகள் | க. ரத்னம் |
| 17. | தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | கா. ராஜன் |
| 18 | தமிழர் சால்பு | சு. வித்யானந்தன் |
| 19 | ஓ, என் சமகாலத் தோழர்களே!, தண்ணிர் தேசம் | கவிஞர் வைரமுத்து |
| 20 | உயிர்வகை | தொல்காப்பியர் |
| 21 | அக்னிச் சிறகுகள் | அப்துல் கலாம் |
| 22 | மின்மினி | ஆயிஷா நடராஜன் |
| 23 | ஏன், எதற்கு, எப்படி? | சுஜாதா |
| 24 | குடும்ப விளக்கு | பாவேந்தர் பாரதிதாசன் |
| 25 | சிறுபஞ்சமூலம் | காரியாசன் |
| 26 | ஓய்ந்திருக்கலாகாது ___ கல்விச் சிறுகதைகள் | தொகுப்பு: அரசி ___ ஆதிவள்ளியப்பன் |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| | | |
|---|---|---|
| 27 | முதல் ஆசிரியர் | சிங்கிஸ் ஐத்மாத்தவ் |
| 28 | கல்வியில் நாடகம் | பிரளயன் |
| 29 | கரும்பலகை யுத்தம் | மலாலா |
| 30 | இராவண காவியம் | புலவர் குழந்தை |
| 31 | நாச்சியார் திருமொழி | ஆண்டாள் |
| 32 | நட்புக்காலம் | கவிஞர் அறிவுமதி |
| 33 | திருக்குறள் கதைகள் | கிருபானந்தவாரியார் |
| 34 | கையா, உலகே ஒரு உயிர் | ஜேம்ஸ் லவ்லாக் - தமிழில்: சா. சுரேஷ் |
| 35 | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | மா. சு. அண்ணாமலை |
| 36 | சீவக சிந்தாமணி | திருத்தக்க தேவர் |
| 37 | மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் |
| 38 | ஆகாயத்துக்கு அடுத்த வீடு | மு. மேத்தா |
| 39 | தமிழ்ப் பழமொழிகள் | கி. வா. ஜகந்நாதன் |
| 40 | இருட்டு எனக்கு பிடிக்கும் (அன்றாட வாழ்வியல் அறிவியல்) | ச. தமிழ்ச்செல்வன் |
| 41 | ஒளியின் அழைப்பு | ந. பிச்சமூர்த்தி |
| 42 | தாவோ தே ஜிங் | லா வோட்சு |
| 43 | பெரியாரின் சிந்தனைகள் | வே. ஆனைமுத்து |
| 44 | அஞ்சல் தலைகளின் கதை | எஸ். பி. சட்டர்ஜி<br>(மொழிபெயர்ப்பு ___ வீ. மு. சாம்பசிவன் |
| 45 | தங்கைக்கு | மு. வரதராசன் |
| 46 | தம்பிக்கு | அறிஞர் அண்ணா |
| 47 | அக்கறை | கல்யாண்ஜி |
| 48 | குறுந்தொகை | பாலை பாடிய பெருங்கடுங்கோ |
| 49 | சிற்பியின் மகள் | பூவண்ணன் |
| 50 | அப்பா சிறுவனாக இருந்தபோது | அலெக்சாந்தர் ரஸ்கின்<br>(தமிழில் நா. முகமது செரீபு) |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## அலகிட்டு வாய்ப்பாடு

1. **அரியவற்றுள் எல்லா அரிதே பெரியாரைப்**
   **பேணித் தமராக் கொளல்.**

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| அரிய/வற்/றுள் | நிரை/நிரை/நேர் | கருவிளங்காய் |
| எல்/லா | நேர்/நேர் | தேமா |
| அரி/தே | நிரை/நேர் | புளிமா |
| பெரி/யா/ரைப் | நிரை/நேர்/நேர் | புளிமாங்காய் |
| பே/ணித் | நேர்/நேர் | தேமா |
| தம/ராக் | நிரை/நேர் | புளிமா |
| கொளல் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

2. **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
   **உயிரினும் ஓம்பப் படும்.**

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| ஒழுக்/கம் | நிரை/நேர் | புளிமா |
| விழுப்/பம் | நிரை/நேர் | புளிமா |
| தர/லான் | நிரை/நேர் | புளிமா |
| ஒழுக்/கம் | நிரை/நேர் | புளிமா |
| உயி/ரினும் | நிரை/நிரை | கருவிளம் |
| ஓம்/பப் | நேர்/நேர் | தேமா |
| படும் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

3. **ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
   **எய்துவர் எய்தாப் பழி**

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| ஒழுக்/கத்/தின் | நிரை/நேர்/நேர் | புளிமாங்காய் |
| எய்/துவர் | நேர்/நிரை | கூவிளம் |
| மேன்/மை | நேர்/நேர் | தேமா |
| இழுக்/கத்/தின் | நிரை/நேர்/நேர் | புளிமாங்காய் |
| எய்/துவர் | நேர்/நிரை | கூவிளம் |
| எய்/தப் | நேர்/நேர் | தேமா |
| பழி | நிரை | மலர் |

இக்குறட்பா "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| நன்/றிக்/கு | நேர்/நேர்/நேர் | தேமாங்காய் |
| வித்/தா/கும் | நேர்/நேர்/நேர் | தேமாங்காய் |
| நல்/லொழுக்/கம் | நேர்/நிரை/நேர் | கூவிளங்காய் |
| தீ/யொழுக்/கம் | நேர்/நிரை/நேர் | கூவிளங்காய் |
| என்/றும் | நேர்/நேர் | தேமா |
| இடும்/பை | நிரை/நேர் | புளிமா |
| தரும் | நிரை | மலர் |

இக்குறட்பா "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

## வேலை வேண்டி விண்ணப்பம்

**அனுப்புநர்**

மா. கண்ணன்
91, தோப்புத் தெரு,
திருவில்லிபுத்தூர்.

**பெறுநர்**

நகராட்சி ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
திருவில்லிபுத்தூர்

**ஐயா,**

**பொருள் :** வேலை வேண்டி விண்ணப்பித்தல்.

திருவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் எழுத்தர் வேலைக்கான விண்ணப்பங்கள் வேண்டித் தாங்கள் அறிவிப்புச் செய்திருந்தமையை நகர்மன்ற அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டிருந்த விளம்பரத்தின் மூலமாய் அறியலானேன்.

மேற்படி எழுத்தர் வேலைக்கு என்னையும் ஒருவனாக எடுத்துக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். நான் திருவில்லிபுத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் படித்து 1990 ஆம் ஆண்டு எஸ். எஸ். எல். சி. தேர்வில் 420 மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றுள்ளேன். தமிழ்த் தட்டெழுத்திலும், ஆங்கிலத் தட்டெழுத்திலும் பயிற்சி பெற்று உயர்நிலைச் சான்றிதழ் பெற்றுள்ளேன்.

இவ்விண்ணப்பத்துடன் எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியரும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் தந்த நற்சான்றிதழ்களையும் இணைத்துள்ளேன். அத்துடன் தட்டெழுத்துச் சான்றிதழ், எஸ். எஸ். எல். சி. சான்றிதழ் முதலியவற்றில் படிகளையும் இணைத்துள்ளேன்.

தாங்கள் கருணை கூர்ந்து திருவில்லிபுத்தூர் நகராட்சியில் எனக்கு ஓர் எழுத்தர் வேலையளிக்க வேண்டுகிறேன்.

**திருவில்லிபுத்தூர்** **இப்படிக்கு,**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



15.12.2019

தங்கள் உண்மையுள்ள,

மா. கண்ணன்

**உறைமேல் முகவரி :**

**பெறுநர் :**

நகராட்சி ஆணையாளர்,

நகராட்சி அலுவலகம்,

திருவில்லிபுத்தூர்

## மருத்துவ வசதி கோரி விண்ணப்பம்

**அனுப்புநர்**

சா. நாராயணன்,

மம்சாபுரம்,

திருவில்லிபுத்தூர்

**பெறுபவர்**

ஊராட்சி ஒன்றியத் தலைவர்,

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,

திருவில்லிபுத்தூர்

**ஐயா,**

**பொருள் :** மருத்துவ வசதி கோரி விண்ணப்பித்தல்

எங்கள் ஊராகிய மம்சாபுரம், திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இரண்டு பேரூராட்சி மன்றங்களில் மிகப் பெரியது. இங்குள்ள மொத்த மக்கள் தொகை சுமார் 22,000 ஆகும். இங்குப் பல அரசாங்க அலுவலகங்களும், பள்ளிக்கூடங்களும், தொழிற்சாலைகளும் உள்ளன.

இவ்வளவு வசதிகள் இருந்தும் திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் நடைபெறும் சிறிய மருத்துவமனை ஒன்றே இங்கு உள்ளது. அதுவும் பெயரளவில் மட்டும் தான் மருத்துவமனையாக உள்ளது. இங்கு நிரந்தரமான டாக்டர் இல்லை. போதிய மருந்துகளும் கிடைப்பதில்லை. திருவில்லிபுத்தூரிலிருந்து சில நாள் மட்டுமே மருத்துவர் வந்து செல்கிறார். இதனால் மக்களுக்குத் தேவையான நேரத்தில் மருத்துவ வசதி கிடைக்க வழியில்லை.

ஆகவே எங்கள் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைக்குப் போதிய மருத்துவ வசதிகள் செய்து தருவதோடு நிலையான எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற மருத்துவரை நியமிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மம்சாபுரம்** **இப்படிக்கு,**

15.12.2019 **தங்கள் உண்மையுள்ள,**

**சா. நாராயணன்**

**உறைமேல் முகவரி :**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பெறுநர் :

ஊராட்சி ஒன்றியத் தலைவர்,

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,

திருவில்லிபுத்தூர்

## குடிநீர்க்கேட்டு கூட்டு விண்ணப்பம்

**அனுப்புநர்**

பொதுமக்கள்,

மம்சாபுரம் பேரூராட்சி,

மம்சாபுரம்,

திருவில்லிபுத்தூர்.

**பெறுநர்**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,

ஆட்சியர் அலுவலகம்

விருதுநகர்.

**மதிப்பிற்குரிய ஐயா,**

விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு, திருவில்லிபுத்தூர் வட்டத்தைச் சார்ந்த மம்சாபுரம் பேரூராட்சி மன்றப் பகுதியில் வாழும் பொது மக்கள் அன்புடன் விடுக்கும் வேண்டுகோள்.

எங்கள் மம்சாபுரம் மக்கள் தொகை 22,000. எங்கள் ஊரில் நெடுஞ்சாலைக்குக் கிழக்கே உள்ள பகுதியில் உள்ள கிணறுகள் எல்லாம் உவர் நீர்க் கிணறுகளே. சாலைக்கு மேற்கே உள்ள கிணறுகளில் நீண்ட கால வறட்சியின் காரணமாகத் தண்ணீரே இல்லை. மழை பொழியாமல் ஆறு, குளங்களில் அறவே தண்ணீர் இல்லை. ஆடு, மாடுகளைக் குளிப்பாட்டுவது கூட மிகவும் துன்பமாக உள்ளது. நல்ல தண்ணீர் எடுக்க ஊருக்கு வெளியே இரண்டு கிலோ மீட்டர் தொலைவுக்கு மேல் நடக்க வேண்டியுள்ளது. இதனால் மகளிர் படும் தொல்லைக்கோர் எல்லை இல்லை.

எங்கள் ஊருக்க வெளியே அனுமன் ஆற்றுப்படுகையில் நல்ல தண்ணீர் கிடைப்பதற்குரிய வாய்ப்பு உள்ளதாக நிலத்தடி நீர் ஆய்வு செய்த குடிநீர் வாரியத்தினர் கூறி உள்ளனர். அதன் அடிப்படையில் எங்கள் பேரூராட்சி மந்றத்தினர் சார்பாக குடிநீர்த் திட்டம் ஒன்று. பத்து லட்சம் செலவில் தீட்டி தங்கள் பார்வைக்கும், அரசுக்கும், குடிநீர் வாரியத்துக்கும் அனுப்பி ஓராண்டு ஆகியும் எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை.

ஆகவே பெருமதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எங்கள் வேண்டுகோளை ஏற்று எங்கள் பேரூராட்சி மன்றம் தீட்டிய குடிநீர்த்திட்டம் நிறைவெய்திட ஆவன செய்து எங்கள் நீர்வேட்கையை தணிக்குமாறு வேண்டுகிறோம்.

**மம்சாபுரம்** **இப்படிக்கு,**

**15.12.2019** **மம்சாபுரம் பொதுமக்கள்,**

**வே. தங்கவேல்**

**த.வளவன்**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



~~(இன்னும் பல கையொப்பம் இடுக)~~

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,

ஆட்சியர் அலுவலகம், விருதுநகர்.

---

## புத்தகம் அனுப்புமாறு மடல்

**அனுப்புபவர்**

லெ. ராஜேஷ்

77- அண்ணா நகர்,

மதுரை.

**பெறுபவர்**

சூர்யா பதிப்பகம்

நெடுங்சாலை

மதுரை-1

**ஐயா,**

வணக்கம். தங்கள் பதிப்பகத்திலிருந்து உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக வெளியிட்டுள்ள கட்டுரைக் கரும்பையும், நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்காக வெளியிட்டுள்ள கட்டுரைக கனியையும், இலக்கண நூலாகிய இனிக்கும் இலக்கணத்தையும் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. மாணவர் அறிவு நலன் நாடியும் தேர்வுப் பயன் கருதியும் சுருக்கமும், எளிமையும் இனிமையும் நிறைந்த மூன்று நூல்களும் மாணவர் உலகுக்கு வழி காட்டிகளாகும்.

அவற்றைப் பெற்றுப் பயன்பெற விருப்புகிறேன். மூன்று நூல்களுக்கு உரிய பணம் 60ஐ பணவிடை வழியாக இன்று அனுப்பியுள்ளளேன். தாங்கள் குறித்து உள்ளது போல் தங்கள் செலவில் விரைவில் அனுப்பி வைத்து உதவுமாறு அன்பாய் வேண்டுகிறேன்.

**மதுரை**

15.12.2019

**தங்கள் உண்மையுள்ள,**

**லெ. ராஜேஷ்.**

**உறைமேல் முகவரி :**

**பெறுபவர்**

சூர்யா பதிப்பகம்

நெடுங்சாலை

மதுரை-1

---

## தேர்வில் முதலிடம் பெற்றவனுக்குப் பாராட்டு மடல்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17, கம்பர் தெரு,
திருவில்லிபுத்தூர்,
15.12.2019.

**அன்புள்ள செந்தில் குமரனுக்கு**

வாழ்க. நலம். நலமே நாட்டம். இவ்வாண்டு பத்தாம் வகுப்புத் தேர்வில் நீ மாநில முதன்மை பெற்ற செய்தியை நாளிதழ் வழி அறிந்தேன், மகிழ்ந்தேன். எங்கள் வீட்டில் அனைவரிடமும் கூறி உன்படம் வெளிவந்த பத்திரிகையையும் காட்டினேன். நான் பெற்ற பெருமதிப்பாகவே எண்ணி எங்கள் வீட்டில் அனைவரும் உன்னைப் பாராட்டினர்.

இதுபோன்றே நீ மேல்நிலைப் பள்ளித் தேர்விலும் முதல் மதிப்பெண் பெற வேண்டும் என விரும்புகிறேன். நானும் நன்குப் படித்து நல்ல மதிப்பெண் பெற உனக்குக் கிடைத்த வெற்றி எனக்கும் நல்வழி காட்டியுள்ளது.

"மகன்தந்தைக் காற்றும் உதவிஇவன் தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கணமாய் நிற்கும் உன்னை மீண்டும் பாராட்டி மேலும் பல வெற்றிகளைக் குவிக்க வேண்டிக் கொள்ளுகிறேன்.

**இடம் :** திருவில்லிபுத்தூர் **இப்படிக்கு,**

**நாள் :** 15.12.2019 **உன் ஆருயிர் நண்பன்,**

**த. செழியன்**

**உறைமேல் முகவரி :**

**பெறுபவர் முகவரி :**

இரா. செந்தில் குமரன்,
80, அம்மன் சந்நிதித் தெரு,
திருவில்லிபுத்தூர்.

---

## இன்பச் செலவு பற்றி மடல்

அரசு மேல்நிலைப் பள்ளி,
மல்லி,
15.12.2019.

**அன்புள்ள எழில்,**

வணக்கம். நலம். நலமே நாட்டம். நான் இவ்வாண்டு கோடை விடுமுறையில் சென்னை சென்றிருந்தேன். என் சிற்றப்பா அங்குப் பணியாற்றுவதால் அவ்வாய்ப்புக் கிடைத்தது.

பணகுடியில் இருந்து புகைவண்டியில் புறப்பட்டு சென்னை எழும்பூர் நிலையத்தை நானும் என் தம்பியும் அடைந்தோம். அங்கு வந்த என் சிற்றப்பா எங்களை, தான் வாழும் தங்கச்சாலைப் பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

மறுநாள் முதல் சிற்றப்பா ஊரின் பல இடங்களையும் சுற்றிக் காட்டினார். சென்னை ஒரு மாநகராட்சி மட்டுமல்ல ஒரு மாவட்டமாகவும் விளங்குகிறது. அவ்வளவு மக்கள் தொகை அங்கு உண்டு.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



சென்னையில் இருந்த காலத்தில் நாங்கள் பொருட்காட்சி, மிருகக்காட்சி சாலை, துறைமுகம், கன்னிமரா நூல் நிலையம், அண்ணாசாலை, சைனாபஜார், மெரினா கடற்கரை, திருவல்லிக்கேணி பார்த்த சாரதி கோவில், மயிலாப்பூர் கபாலி கோவில், அடையாறு ஆலமரம், சட்டமன்றம், பல்கலைக்கழகம், நீதிமன்றம் முதலிய பல்வேறு இடங்களைக் கண்டு களித்தோம். சென்னை அருகே உள்ள வேடந்தாங்கல். மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம் போன்ற ஊர்களுக்கும் சென்று வந்தோம்.

நான் கண்ட காட்சிகளைப் பற்றி உனக்கு எழுதினால் போதாது. நீயே அவற்றை நேரில் கண்டு மகிழ வேண்டும். சென்னையில் இருந்த பதினைந்து நாட்களும் போனதே எனக்குத் தெரியவில்லை. நீயும் வரும் ஆண்டு விடுமுறையில் சென்னை சென்று கண்டு களித்து வருவாயாக

இடம் : மல்லி **உன் அன்பு நண்பன்,**

நாள் : 15.12.20194 **த. வளவன்**

**உறைமேல் முகவரி :**

**பெறுபவர் முகவரி :**

எழில் முதல்வன்,
ஒன்பதாம் வகுப்பு "ஆ",
பாரதியார் உயர்நிலைப்பள்ளி,
திருநெல்வேலி - 2

## தலைமை தாங்க அழைப்பு

**அனுப்புபவர்**

ப. திருஞானசம்பந்தம்,
மாணவர் இலக்கிய மன்றச் செயலர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
மம்சாபுரம்.

**பெறுபவர்**

புலவர். பு. முருகேசனார்,
17, நெல்லுக்கடைத் தெரு,
விருதுநகர்.

**ஐயா,**

எங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பாகப் பாரதி விழா நடத்த எண்ணியுள்ளோம். தங்களை விழாவுக்குத் தலைமைப் பொறுப்பு ஏற்க வேண்டுமென வேண்டி இம்மடலை எழுதுகிறேன்.

எங்கள் தமிழாசிரியர் திரு கலியபெருமாள் அவர்கள் தங்களைப் பற்றியும், தங்கள் இலக்கியப் புலமை, பாரதி இலக்கிய ஈடுபாடு பற்றியும் கூறினார்கள்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



தாங்கள் தலைமை தாங்கினால் நாங்கள் பெருமை அடைவோம். இம்மாதம் செப்டம்பரில் தங்களுக்கு எந்த நாளில் வருகை தர இயலும் என்பதைத் தெரிவித்து எழுதினால் உரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

மறுக்கமாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் எழுதுவதால் தங்கள் ஒப்புதல் மடலை எதிர்நோக்குகிறேன்.

மம்சாபுரம் **தங்கள் உண்மையுள்ள,**

15-12-2019 **ப. திருஞானசம்பந்தம்ட,**

**செயலாளர்.**

**உறைமேல் முகவரி :**

**பெறுபவர்**

புலவர். பு. முருகேசனார்,

17, நெல்லுக்கடைத் தெரு,

விருதுநகர்.

---

**நும் ஊரில் சாலைகளில் மின்விளக்கு வசதி/சாலை வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் வரைக விண்ணப்ப கடிதம்**

**அனுப்புநர்**

ஊர்ப் பொதுமக்கள்,

குமாரபுரம்,

மதுரை-2

**பெறுநர்**

நகராட்சி ஆணையர் அவர்கள்,

நகராட்சி அலுவலகம்,

மதுரை-2

**மதிப்பிற்குரிய ஐயா,**

**பொருள்:** சாலை / மின் விளக்கு வசதி வேண்டுதல் சார்பாக,

நாங்கள் வசிக்கும் இடம் குமாரபுரம் பகுதியில் உள்ளது. எங்கள் பகுதி புதிதாக உருவாகி வரும் பகுதியாகும். இங்கு ஏறத்தாழ இருநூறு வீடுகள் உள்ளன. ஏறத்தாழ 1500 மக்கள் வசிக்கின்றனர். எங்கள் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் கடந்த மாதம் பெய்த மழையால் சேதமடைந்து குண்டும் குழியுமாக காட்சி தருகிறது. மேலும் தெருவிளக்குகள் சரிவர எரிவது இல்லை. இரவு நேரங்களில் வெளியூர் சென்று வரும் முதியோர்கள், பெரியவர்கள், குழந்தைகள், தெருக்களில் நடக்கமுடியாமல் இருளில் தவிக்கின்றனர்.

எனவே பழுதுபட்ட சாலைகளைச் சீர்படுத்தியும் எரியாத மின் விளக்குகளை மாற்றியும் தருவது அவசியாகும். நீங்கள் எங்கள் பகுதி மக்களின் இடையூறுகளை எண்ணிப்பார்த்துச் சாலையைச் சீர்படுத்தியும், இருளைப் பகலாக மாற்றத் தெருவிளக்குகள் அமைத்தும் தரும்படி இப்பகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

**குமாரபுரம் இப்படிக்கு,**

**15.12.2019 குமாரபுரம் ஊர் மக்கள் சார்பாக**

**சு. தனுஸ்ரீ, அ. ரேஷ்மா நிலா, ஆ. சுடலைகனி**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



உறைமேல் முகவரி :

பெறுநர்

நகராட்சி ஆணையர் அவர்கள்,

நகராட்சி அலுவலகம், மதுரை-2

**பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.**

17, கபிலர் தெரு,
மம்சாபுரம்
15-12-2019

**என் இனிய நண்பா!**

வணக்கம். இங்கு நான் நலம். அங்கு நீ மற்றும் உன் பெற்றோரின் நலமறிய அவா. நேற்றைய செய்தித்தாளைப் பார்த்தேன். மிகுந்த மகிழ்ச்சி கொண்டேன். என் பெற்றோரும் மிகவும் மகிழ்ந்தனர்.

நண்பா நடந்து முடிந்த பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் நீ 499 மதிப்பெண்கள் பெற்று, மாநிலத்தில் முதலிடம் பெற்றுள்ளாய் என்பதனை உன் புகைப்படத்துடன் கண்டேன் மிகுந்த மகிழ்ச்சி கொண்டேன். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்னும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப நீ சிறு வகுப்பிலே கல்வியின் மேல் அதிக ஆர்வம் கொண்டவன் என்பதை நாங்கள் ஏற்கனவே அறிந்த ஒன்றுதான். அதே போல் நீ பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்று முதலிடம் பெற்றதை அறிந்து மனம் மகிழ்கிறேன். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பதற்கேற்ப உனது விடாமுயற்சியையும் உழைப்பையும் பாராட்டுகிறேன்.

நண்பா! நீ இத்தேர்வைப் போல வரும் ஆண்டுகளில் மேனிலைத் தேர்விலும் உயர்கல்வியிலும் சிறந்த இடம் பெற்று பெருமை சேர்க்க வாழ்த்துகிறேன்.

**இடம் :** மம்சாபுரம்.
**நாள் :** 15.12.2019

**இப்படிக்கு,**
**உன் அன்பு நண்பன்**
**வி.அ. துரைராஜ்**

**உறைமேல் முகவரி :**

க. மணிமாறன்,
தங்கம்மன் கோவில் தெரு,
பாலவிநாயகர் புரம்,
விருதுநகர்.

---

**நும் பள்ளியிலிருந்து ஓய்வு பெறும் தமிழாசிரியரைப் பாராட்டிப் பாராட்டு மடல் ஒன்று வரைக.**

**பாராட்டு மடல்**

**பைந்தமிழ்ப் பாவலரே! செந்தமிழ்க் காவலரே!**

தித்திக்கும் செந்தமிழைத் தேனினும் இனிமை கூட்டி எமக்களித்த கல்விப் பிரம்மன் நீவர்! தமிழாசிரியருக்கு இன்று ஓய்வா? என்பதை நாங்கள் எண்ணுகையில் (நினைத்தல்) நெஞ்சமெல்லாம் சற்றுக் கலங்குகின்றன. தாயைப் பிரிந்த சேய் போலக் கலங்கி நிற்கின்றோம் கண்ணீரோடு!



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



என்றும் நிலைத்து நிற்கும் அமிழ்தினும் இனிய நற்றமிழை நலமுடன் எங்களுக்குப் போதித்தீர். நல்வழிப்படுத்தினீர். முன்னோர் வகுத்த இலக்கணத்தை எங்கள் மனம் எளிதில் புரியும் வண்ணம் கற்பித்தீர். இலக்கியச் சுவைகளில் எங்களை மெய்மறக்க வைத்தீர். பார்வைக்கு எளிமை, பழகுவதில் இனிமை, அன்பு கலந்த வார்த்தைகளால் எங்களிடம் உள்ள கரடுமுரடான எண்ணங்களைப் போக்கி பிறரிடம் நாங்கள் எப்படிப் பழக வேண்டும் என்று எங்களை மாற்றிய பனிமலரே உம் பண்பு நலன்கள் கண்டு உள்ளம் வியக்கின்றோம்.

**குற்றமிலா நல்முத்தே! குணங்கள்மிகு சொத்தே!**

எங்கள் அறியாமை இருளை நீக்கி அறிவொளி வீசிய ஒளி விளக்காய்த் திகழ்ந்தீர். தொல்காப்பியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை இன்னமுதாய்ப் போதித்தீர். சுமையான பாடங்களைக் கூட சுவையாக மாற்றி எங்களுக்கு உணர வைத்தீர்! குணங்கள் மிகுந்த சொத்தே! இனி நாங்கள் என்று, எங்கு எப்போது உங்களைக் காண்போம்.

அரும்பணியாற்றிய ஆற்றல் சால் சான்றோரே!

முப்பது ஆண்டுகள் முத்தமிழை முழுதும் நேசித்தே நீவிர் ஆற்றிய பணிகண்டு வியக்கின்றோம். நீவிர் மாணவர்களுக்கும் மக்களுக்கும் அரும்பணி ஆற்றினீர். தமிழ் அன்னைக்கு நீவிர் செய்த கடமைப்பணியில் (ஆசிரியர்) ஓய்வுபெற்றாலும் தொடரட்டும் தமிழ்ப்பணி, தரணி போற்றும் என்றும் உங்களை; நீவிர் நீண்ட ஆயுளையும் நல்சுகமும் பெற்று வாழ இறைவனை வேண்டுகிறோம்.

மதுரை இன்னணம்,
15.12.2019. பள்ளி மாணவர்கள்.

---

## தெருவிளக்கு எரியுமாறு வேண்டி மடல்

**அனுப்புநர்**

பா. கணேசன்,
20, மாதாகோவில் தெரு,
மம்சாபுரம்.

**பெறுநர்**

பேரூராட்சி மன்றத் தலைவர்,
பேரூராட்சி மன்றம்,
மம்சாபுரம்.

**ஐயா,**

**பொருள் :** மாதாகோவில் தெருவில் தெரு மின்விளக்கு எரிய வைப்பது தொடர்பாக.

வணக்கம். மாதாகோவில் தெருமக்கள் சார்பாக இவ்விண்ணப்பத்தைத் தங்கள் பார்வைக்கு வைக்கிறேன்.

மம்சாபுரம் மாதாகோவில் தெரு இவ்வூரின் முக்கிய வீதிகளில் ஒன்று. இத்தெருவில் உள்ள மூன்று விளக்குகளில் இரண்டு அறவே எரியவில்லை. காலை ஐந்து மணிக்கே கோவிலுக்கு மக்கள் வரத் தொடங்கிவிடுகிறார்கள். இப்பாதை வழியாகத் தான் காலை ஐந்து மணித் தொடர்வண்டி ஏற மக்கள் செல்ல வேண்டியுள்ளது. அன்றியும் தெருக்களில் இரவில் திருடர் பயம் உள்ளது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆகவே, முக்கியத்துவம் வாய்ந்த எங்கள் தெருவில் எரியாத மின்விளக்குகளைக் குழல் விளக்குகளாக மாற்றிப் பொருத்துமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

மம்சாபுரம் தங்கள் உண்மையுள்ள,

15.12.2019 பா. கணேசன்.

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்**

பேரூராட்சி மன்றத் தலைவர்,
பேரூராட்சி மன்றம்,
மம்சாபுரம்.

---

**தட்டச்சர் பணிக்கு (அ) அலுவலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்க, தன் விவரப்பட்டியல் தாயாரித்தெழுதுக.**

**வேலை வேண்டி விண்ணப்பம்**

**அனுப்புநர்**

க. நித்தேஷ்,
42, சாரல் தெரு,
இராஜபாளையம்,
விருதுநகர் - 626 108.

**பெறுநர்**

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள்,
மாநகராட்சி அலுவலகம்,
இராஜபாளையம்.

**பெருமதிப்பிற்குரிய ஐயா,**

**பொருள் :** தட்டச்சர் பணி வேண்டி விண்ணப்பம்.

தங்கள் உயர்வான நிறுவனத்தில் தட்டச்சர் பணியிடத்திற்கு ஆள் தேவை என்பதைக் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை (10.12.19) தினநாளேடு மூலம் அறிந்தேன்.

நான் அரசு மேனிலைப் பள்ளியில் படித்தேன். வணிகவியல், கணக்குப் பதிவியல், பொருளியல் பாடங்களைப் படித்து மேனிலைத் தேர்வில் 95 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றுள்ளேன். ஓய்வு நேரங்களில் கூடுதலாகத் தட்டெழுத்துப் பயிற்சியில் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் மேனிலையில் (Higher) படித்துள்ளேன். கணினிப் பிரிவிலும் M.S. Excel போன்ற சான்றிதழ் படிப்புகள் படித்துள்ளேன். மேலும் சில நிறுவனங்களில் தட்டச்சு சம்பந்தமான பணியாற்றிப் பயிற்சியும் (அனுபவம்) பெற்றுள்ளேன். இதனுடன் எனது தன் விவரக் குறிப்பையும் இணைத்துள்ளேன்.

என்னை உங்கள் நிறுவனத்தில் நியமனம் செய்தால், என் பணியை முழுமையாகவும், உண்மையாகவும் நிறுவன முன்னேற்றத்திற்காவும் அயராது உழைப்பேன் என உறுதி கூறுகின்றேன்.

இராஜபாளையம் இப்படிக்கு,

15.12.19 தங்கள் உண்மையுள்ள,

க. நித்தேஷ்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



உறைமேல் முகவரி :

**பெறுநர்**

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள்,

மாநகராட்சி அலுவலகம், விருதுநகர்.

**தன்விவரக் குறிப்பு**

| | |
|---|---|
| பெயர் | - க. நித்தேஷ் |
| பிறந்த நாள் மற்றும் வயது | - 03.04.1992 - 27 வயது |
| பாலினம் | - ஆண் |
| தந்தையின் பெயர் | - கண்ணன் |
| முகவரி | - 11, 42, சாரல் தெரு, இராஜபாளையம், விருதுநகர். |
| பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | - 95% |
| தாய்மொழி | - தமிழ் |
| பயின்ற மொழிகள் | - தமிழ், ஆங்கிலம் |
| தட்டச்சு | - உயர்நிலை (Hihger) |
| கணினி அறிவு | - MS. Excel, Tally. |

## மாற்றுச் சான்றிதழ் கோரி தலைமையாசிரியருக்குக் கடிதம்

மதுரை,

25.10.2019.

**அனுப்புநர்**

ஆ. பாண்டியன்,

130, காமராஜர் நகர்,

மதுரை -2.

**பெறுநர்**

உயர்திரு. தலைமையாசிரியர் அவர்கள்,

பாரதி மேல்நிலைப்பள்ளி,

மதுரை -2.

**மதிப்பிற்குரிய ஐயா,**

வணக்கம்.

**பொருள் :** மாற்றுச் சான்றிதழ் வேண்டுதல் சார்பாக.

நான் நம் பள்ளியில் பத்தாம் வகுப்பு ‘ஆ’ பிரிவில் படித்துத் தேர்ச்சி பெற்றுள்ளேன். நாங்கள் என் தந்தையின் பணி மாறுதல் காரணமாக குடும்பத்துடன் வெளியூர் செல்லவிருக்கின்றோம். அங்கு சென்று எனது படிப்பைத் தொடர எனக்கு மாற்றுச் சான்றிதழ் தேவைப்படுகிறது. எனவே மாற்றுச் சான்றிதழைத் தந்து எனக்கு உதவுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்
ஆ. பாண்டியன்

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்**

உயர்திரு. தலைமையாசிரியர் அவர்கள்,
பாரதி மேல்நிலைப்பள்ளி,
மதுரை -2.

---

## பிரியாவிடை மலர்

புலவர் இளமாறன் அவர்கள்
சேத்தூர் சேவுகப் பாண்டி அரசினர்
மேல்நிலைப்பள்ளியிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு
மாணவர்கள் உவந்தளித்த பிரியாவிடை மலர்

**கல்விக் கடலே!**

**"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"**

என்று திருவள்ளுவரின் அறிவுரையை மாணவர்களாகிய நாங்கள் மேற்கொள்ள ஆதரவாய் இருந்த தமிழையா அவர்களே!

பல்லாண்டுகளாகத் தாங்கள் அளித்த தீந்தமிழ்க்கனிகளைச் சுவைத்துத் திளைத்த நாங்கள் - தங்களை விட்டு பிரிகிறோம் என்பதை நினைத்த போது விவரிக்க முடியாத வேதனைப்பட்டோம். என்றாலும் தாங்கள் ஓய்வு பெறுகிறீர்கள் என்றெண்ணி ஆறுதல் கொண்டோம்.

**அறிவுக் கடலே!**

சங்க இலக்கியக் கடலில் நீந்தித் திளைத்து, எங்களையும் அவ்வின்பத்தைப் பெறுமாறு செய்த தாங்கள் எங்களுக்குக் கல்வி புகட்டும் ஆசானாய் மட்டுமின்றி ஒழுக்கத்தை வலியுறுத்துவதில் திருவள்ளுவராய்த் திகழ்ந்தீர்கள். நீங்கள் பாடம் நடத்தும் போதெல்லாம் சேக்கிழாரும், கம்பரும், நன்னூலாசிரியரும் திரு.வி.கவும் எங்கள் முன் வந்து பேசுவதாகவே உணர்ந்தோம்.

**தமிழ்த்தாயின் தவப்புதல்வரே!**

தமிழின் பெருமையை, சிறப்பை, பழமையைத் தாங்கள் கூறும் போதெல்லாம் எங்களை நாங்களே மறந்தோம். நாங்கள் எங்கிருந்தாலும் தங்கள் தமிழை எண்ணியே வாழ்வோம். தாங்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றி புகழோடு விளங்க செந்தில் செவ்வேளின் திருவடிகளை வணங்கி விடை பெற்றுக் கொள்ளுகிறோம்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இராஜபாளையம் இங்ஙனம்,

15.12.2019

சேத்தூர் சேவுகப் பாண்டி
அரசினர் மேல்நிலைப்பள்ளி
மாணவர்கள்.

## மேல்நிலைப்பள்ளி வேண்டி மடல்

**அனுப்புநர்**

ஊர்ப் பொதுமக்கள்,
சத்திரப்பட்டி (வழி),
ஆலங்குளம்.

**பெறுபவர்**

மாண்புமிகு கல்வி அமைச்சர்,
தமிழக அரசு தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

**மாண்புமிகு அமைச்சர் பெரும,**

**பொருள் :** மேல்நிலைப் பள்ளி வேண்டுதல்

எங்களூர் மணி நகரம் ஆலங்குளத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எங்களூர் உயர்நிலைப் பள்ளிப் பிள்ளைகள் ஆலங்குளம் சென்று கல்வி கற்கத் துன்பப்படுகின்றனர். நடைபாதைப் போக்குவரவு கடினமாக உள்ளது. பேருந்துப் போக்குவரவும் வசதியாக இல்லை. இங்குள்ள பெரும்பான்மையான மக்கள், பிள்ளைகளை வெளியூர் அனுப்பிப் படிக்க வைக்க இயலா ஏழ்மை நிலையில் உள்ளனர். இவ்வூரில் உள்ள தனியார் உயர்நிலைப் பள்ளியில் 1000 மாணவர்கள் பயில்கிறார்கள். 200 மாணவர்கள் மேல்நிலைப் படிப்புக்கு வெளியூர் சென்று வருகின்றனர்.

ஆகவே எங்களூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தரவோ புதிய அரசு மேல்நிலைப் பள்ளியை ஏற்படுத்தித் தரவோ வேண்டுகிறோம். அரசுத் தரப்பில் மேல்நிலைப் பள்ளி ஏற்படுவதாக இருந்தால் பொது மக்கள் சார்பில் மூன்று ஏக்கர் நிலமும் ரூ.2,00,000 நன்கொடையும், தரத்தயாராக உள்ளோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மணி நகரம் தங்கள் உண்மையுள்ள,
15.12.19

1. அ. மருதமுத்து,
ஊராட்சித் தலைவர்.
2. ப. கனிமுத்து,
நடுநிலைப்பள்ளி
தலைமை ஆசிரியர்.
3. அ. சண்முகம்,
கோயில் அறங்காவலர்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



உறைமேல் முகவரி :

**பெறுபவர்**

மாண்புமிகு கல்வி அமைச்சர்,

தமிழக அரசு தலைமைச் செயலகம்,

சென்னை - 600 009.

---

**நான் விரும்பும் கவிஞர் பாரதியார்**

**குறிப்புச் சட்டகம் :**

1. முன்னுரை
2. பிறப்பும் இளமையும்
3. விடுதலை வேட்கை
4. தேசியக் கவிஞர் பாரதியார்
5. முன்னறி புலவர் பாரதி
6. சமுதாயத் தொண்டு
7. முடிவுரை

**முன்னுரை :**

நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காவும் தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றனையும் இழந்த செம்மல்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள், கவிஞர்கள் எனப் பலர் இருக்கிறார்கள். அவர்களுள் நான் விரும்பிப் போற்றும் கவிஞர் மகாகவி பாரதியார் ஆவார். அவர் கவிதைகள் மூலம் தேசியத்தை வளர்த்துத் தமிழ் மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டினார்.

**பிறப்பும் இளமையும் :**

சின்னசாமி, இலக்குமி அம்மையார் ஆகியோர்க்கு மகனாக 11.12.1882 இல் பாரதியார் பிறந்தார். பிறந்த ஊர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டையாபுரம். அவர் இளமையிலேயே ஆங்கிலக் கல்வியை அறவே வெறுத்தார். பைந்தமிழ்ப் பாவலராய்த் திகழ்ந்து பாரதி என்னும் பட்டம் பெற்றார். அவர், சில காலம் எட்டையபுரம் அரசவைக் கவிஞராக விளங்கினார். பின்னர், மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்; சென்னையில் இதழாசிரியராகவும் பணிபுரிந்தார்.

**விடுதலை வேட்கை :**

பாரதியார் வாழ்ந்த காலம், பாரத நாடு ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டிருந்த காலம். நாடு விரைவில் விடுதலை அடையவேண்டுமென்ற துடிப்புடன் இருந்தார். தம் பாட்டுத்திறத்தால், தூங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி விடுதலைக் கனலை மூட்டினார். சாதிசமயப் பாகுபாடின்றி அனைவரையும் விடுதலை வேள்வியில் ஈடுபடச் செய்தார்.

**"ஆயிரம் உண்டிங்கு சாதி எனில்**
**அன்னியர் வந்து புகலென்ன நீதி"** என வீர முழக்கமிட்டார்.

**"பாருக்குள்ளே நல்ல நாடு"**
**"நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்"** - என்றெல்லாம் பாடி, மக்களுக்கு நாட்டுப்பற்றையும் விடுதலை உணர்வையும் ஊட்டினார்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**தேசியக் கவிஞர் பாரதியார் :**

இந்தியத் திருநாட்டின் இணையற்ற கவிஞராகப் பாரதியார் விளங்கினார். இதனால் அவர், அனைவராலும் 'தேசியக் கவிஞர்' எனப் பாராட்டப் பெற்றார். 'எல்லாரும் ஓர் குலம். எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் இந்நாட்டு மன்னர்' எனத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை ஊட்டினார்.

**"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்**
**மெய்ப்புற ஒன்றுடையாள் இவள்**
**செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனிற்**
**சிந்தனை ஒன்றுடையாள்".**

என்னும் பாடலின் மூலமாக "முப்பதுகோடி மக்களும் இந்தியரே, அவர்கள் பேசும் மொழி பலவாய் இருப்பினும் சிந்தனை ஒன்றே!" என்ற உயரிய தேசிய உணர்வை ஊட்டியவர் பாரதி.

**முன்னறி புலவர் பாரதி :**

விடுதலை அடைவதற்கு முன்பாகவே, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளைத் தாம் வாழும் காலத்திலேயே பாடி மகிழ்ந்த முன்னறி புலவர் பாரதியாவார்.

**"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே,**
**ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட் டோமென்று"** எனவும்,
**"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்**
**மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்"** எனவும்,
**"காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்"** எனவும், பாடினார் பாரதியார்.

**சமுதாயத் தொண்டு :**

சாதிவேரை முளையிலேயே கிள்ளி எறிய விரும்பியவர் பாரதி. அதனால்தான், 'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' எனக் குழந்தை மனத்தில் ஆழப்பதித்தார் பாரதி.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்பதன் மூலம் பெண்கள் நலன் பேண விரும்பியவர் பாரதி.

**"தனியொருவனுக் குணவிலை யெனில்**
**சகத்தினை அழித்திடுவோம்"**
**"வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்"**
**"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே"** - என்று பாடிய பாடல்களே, பாரதியாரின் சமுதாயத் தொண்டுள்ளத்திற்கும் மொழிப்பற்றுக்கும் தக்க சான்றுகளாம்.

**முடிவுரை :**

'பாரநாடு பார்க்கெலாம் திலகம்' எனப் பாடிய பைந்தமிழ்ப் பாவலன் 11.09.1921 அன்று மண்ணுலகைவிட்டு விண்ணுலகை அடைந்தார். அவர் வழி நாமும் நடந்து, நாடும் வீடும் போற்ற வாழ முயல்வோமாக!



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## சுற்றுலா செல்ல அனுமதி வேண்டி தந்தைக்கு கடிதம் எழுதுக

ராஜா வீதி,
15.12.2019

அன்புள்ள தந்தைக்கு,

நான் இங்கு நலம். அதுபோல் அங்குள்ள அனைவரின் நலம் அறிய ஆவல். நான் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழா பேச்சு போட்டியில் கலந்துக் கொண்டு முதல் பரிசு பெற்றுள்ளேன். அதுபோல் வகுப்பிலும் முதல் மாணவனாக தேர்வாகியுள்ளேன்.

எங்கள் பள்ளியில் கல்வி சுற்றுலாவாக மாமல்லபுரம் செல்ல உள்ளனர். சுற்றுலாவில் நானும் கலந்து கொண்டு வரலாற்று தகவல்களை தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையால் அமைதி வேண்டி இந்த கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன். தங்கள் அனுமதியுடன் சுற்றுலா சென்று வர ரூ.1000 அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்பு மகன்
க. நித்தேஷ்.

உறைமேல் முகவரி :

கண்ணன். ஜெ.
குமார் நகர்,
திருச்சி -1.

---

## விளையாட்டு வீரனுக்குப் பாராட்டு

47, இரமணர் தெரு,
திருவண்ணாமலை,
15.12.2019.

அன்புள்ள முத்துக்கு,

வணக்கம். நலம். நலமே நாட்டம். நீ எழுதிய மடல் கிடைத்தது. மாநில விளையாட்டுப் போட்டியில் மூன்றில் நீ முதன்மை பெற்றது அறிந்து மகிழ்கிறேன். என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குண்டு எறிதல், பழு தூக்குதல், 800 மீட்டர் ஓட்டப் பந்தயம் ஆகிய மூன்றும் வலிமையை வெளிப்படுத்தும் வீர விளையாட்டுகளே. நீ ஈட்டி எறிதல், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல் ஆகிய மூன்றிலும் இரண்டாம் இடம் பெற்றமையும் மகிழ்ச்சிகுரியதே. மேலும் நன்குப் பயின்று, நீ பிற நாடுகளுக்குச் சென்று விளையாடி வெல்ல வேண்டும் என்பது எண்ணம்.

நம் பாரத நாடு விளையாட்டுப் பயிற்சியில் பின் தங்கிய நிலையில் இருப்பது வருந்துவதற்குரியது. உன் போன்ற வீரர்களால் அக்குறை நீக்கப்பட வேண்டும். ஆசிய விளையாட்டுப் போட்டி, அகில இந்திய விளையாட்டுப் போட்டி,



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



~~ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி ஆகியவற்றில் கலந்து வெற்றி குவித்து நாட்டுக்கும் வீட்டுக்கும் நற்புகழ் கிடைக்க~~ உழைக்க வேண்டுகிறேன். என் ஊக்குவிப்பையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இப்படிக்கு,**

**உன் அன்பு நண்பன்,**

**க. ராஜா.**

**உறைமேல் முகவரி :**

கு. முத்து,

17, மறைமலைத் தெரு,

மம்சாபுரம், திருவில்லிபுத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

---

## பேச்சுப்போட்டி - பரிசுக்கு பாராட்டு

**17, சேக்கிழார் தெரு,**

**திருவில்லிபுத்தூர்**

**15.12.2019.**

**அன்புள்ள குமாரவேலுக்கு,**

வணக்கம். நலம். நலமே நாட்டம். உன் அழைப்பை ஏற்று உன் பள்ளியில் நடைபெற்ற பாரதி விழாவில் கலந்து கொண்டமைக்காகப் பெரிதும் மகிழ்கிறேன். விழாவில் நடந்த பாரதி பற்றிய நிகழ்ச்சிகள் சிறப்புற அமைந்திருந்தன.

சிந்து நதிமிசை நிலவினிலே, பாரத மணித்திரு நாடு, ஓடி விளையாடு பாப்பா ஆகிய பாரதி பாடல்கள் இசையோடு பாடப்பெற்றமை எனக்கு மனநிறைவைத் தந்தது. பாஞ்சாலி சபதம் ஓரங்க நாடகக் காட்சி அனைவருடைய கவனத்தையும் ஈர்த்தது சிறப்பாகும்.

அனைத்திற்கும் மேலாக பாரதி விழா பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற உன் பேச்சைக் கேட்டுக் கிறுகிறுத்துப் போனேன். நெஞ்சு பொறுக்குதில்லையே என்ற தலைப்பில் நீ பேசிய பேச்சு தற்கால இளைஞர் சமுதாயத்தைத் தட்டி எழுப்புவதாக இருந்தது. உன்னைக் 'குரலரசு குமரவேல்' என்று மாவட்ட ஆட்சித் தலைவர் புகழ்ந்தபோது எதிர்காலத்தில் நீ மேடைப் பேச்சில் அண்ணாவைப் போல் திகழ்வாய் என நம்பினேன். என் நம்பிக்கை வீண் போகாது எனக் கருதுகிறேன். என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பிற உன் மடல் கண்டு எழுதுகிறேன்.

உனதன்பு நண்பன்,

தி. திருநாவுக்கரசு.

**உறைமேல் முகவரி :**

**பெறுநர் :**

ஆ. குமரவேல்,

தந்தை : திரு. கு. ஆறுமுகம் அவர்கள்,

69/5 அண்ணாநகர்,

மதுரை.

---



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## அன்றாட வாழ்வில் அறிவியல்

**முன்னுரை**

நாளுக்கு நாள் வளர்ந்து வரும் அறிவியலின் பங்கு நம் அன்றாட வாழ்வில் அதிகரித்துக் கொண்டே வருகிறது. நாம் அறிவியலின் துணையின்றி வளமாகவும் நலமாகவும் வாழ்தல் இயலாது என்பது உறுதியாகிவிட்டது. அளவற்ற அறிவியலின் விந்தைகளில் சிலவற்றை இங்குக் காண்போம்.

**உணவு**

கற்களை உரசி நெருப்புண்டாக்கி இறைச்சியைச் சுட்டுத் தின்ற மனிதன், இன்று சில மணித்துளிகளிலேயே உணவைச் சமைத்து முடிக்கும் மின்னடுப்புகள், காற்றழுத்த அடுப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறான். நீராவி அழுத்தத்தில் சமைக்கும் பாத்திரங்களும் உள்ளன.

**உடை**

இலைதழைகளை உடுத்தி வந்த மனிதன் இன்று வகைவகையான நூல்களாலான வண்ண வண்ண ஆடைகளை அணிகிறான். உடைகளைத் தைக்கவும், உடைகளில் அழகிய வேலைப்பாடுகள் செய்யவும் பொறிகள் உள்ளன. சலவை செய்யச் சவர்க்காரக் கட்டிகளும் தூள்களும் கலவைப் பொறிகளும் உள்ளன. சுருக்கம் போக்க மின் தேய்ப்புப் பெட்டிகளும் உள்ளன.

**உறையுள்**

மலைக்குகைகளில் வாழ்ந்த மனிதன் இன்று மாடமாளிகைகளில் வாழ்கிறான். பளபளப்பும் வழுவழுப்பும் மிக்க தரை, தீப்பற்றாத கூரை, மின்விளக்கு, மின்விசிறி, செந்தணப்பு (Air-Condition) முதலிய பல வசதிகள் கொண்ட வளமனைகளைக் காண்கிறோம்.

**போக்குவரவு**

கட்டைவண்டிப் பயணம் செய்த மனிதன் இன்று மிதிவண்டி, மிதியுந்து, மகிழுந்து, வானூர்தி, கப்பல் முதலியவற்றைப் பயன்படுத்துகிறான்.

**உழவு**

எந்திரக் கலப்பைகள், நீர் இறைக்கும் பொறிகள், நிலத்தைச் செம்மைப்படுத்தும் உழுபொறிகள், உரங்கள் பூச்சிகொல்லி மருந்துகள் முதலியவற்றை அறிவியல் வழங்கியுள்ளதால் உழவு சிறக்கிறது.

**வாணிகமும் தொழிலும்**

தொலைபேசி, தொலைவரி, கணிப்பொறி முதலியன வாணிகத் தொடர்புக்கும் தொழில் வளர்ச்சிக்கும் பேருதவியாக உள்ளன. தொழிற்சாலைகளை இயக்க மின்சாரத்தை வழங்குவதும் அறிவியலே.

**மருத்துவம்**

பழுதுற்ற மனித உடலுறுப்புகளை மாற்றியமைக்க வழி கண்டுள்ளது அறிவியல். குருதி குறைந்தோர்க்கு அதே வகைக் குருதி செலுத்தப்படுகிறது.

**"காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்**
**கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?"**

என்றார் பாரதிதாசன். கருத்தடைச் சாதனங்கள் கண்டறிந்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துகிறது அறிவியல். பல கொடிய நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பெற்றுள்ளன.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



முடிவுரை

நன்மைகள் பல விளைத்துள்ள அறிவியல், உலகையே சில நொடிகளில் அழிக்கவல்ல அணுக்குண்டையும் வழங்கியுள்ளது. கத்தி கொண்டு கனியையும் நறுக்கலாம்; பிறர் உயிரையும் பறிக்கலாம். அறிவியலும் அது போன்றதே. ஆதலால், ஆக்கப்பணிக்கே அறிவியலைப் பயன்படுத்தி அமைதியாய் வாழ்வோமாக!

---

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

**முன்னுரை**

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது திருமூலரின் திருவாக்கு. இறைவன் ஒருவனே. எல்லாரும் ஓர்குலம். இவ்வுண்மையை உணராத மக்கள் சாதிமத வேற்றுமைகளை வளர்த்து, மனித குல ஒற்றுமையைக் குலைத்து வருகின்றனர்.

**சாதிப் பாகுபாடு**

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்றார் வள்ளுவர். செய்யும் தொழிலே தெய்வமெனப் போற்றிய மக்கள் காலப்போக்கில் தொழிலடிப்படையில் சாதிகளைப் பகுத்து வைத்தனர்; குலமும் கோத்திரமும் வகுத்து வைத்தனர். தீண்டத் தகாதோர் எனச் சிலரை ஒதுக்கி, வேண்டத்தகாத கொடுமைகளை இழைக்கலாயினர். இதனால் சாதி வெறி தலைவிரித்தாடத் தொடங்கியது.

**சமய வேறுபாடு**

சமயம் என்னும் சொல் 'சமை' என்னும் சொல்லினின்று பிறந்து, 'பக்குவப்படுத்தல்' என்னும் பொருளைத் தருகிறது. எல்லாச் சமயங்களும் இறைவனடி சேர்தலையே குறிக்கோளாய்க் கொண்டவை. இதனை உணர்த்தவே,

**"பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்**
**புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி எங்கும்**
**கங்குகரை காணாத கடலே".**

என இறைவனை விளிக்கிறார் வள்ளலார். இதனை உணரும் திறனில்லாதவர் தத்தம் சமயமே மேலானது என்றும், உண்மையானது என்றும் போற்றுகின்றனர். பிற சமயங்கள் கீழானவை என்றும், போலியானவை என்றும் தூற்றுகின்றனர். இதனால் சமய வெறி மேலோங்கி மோதல்கள் எழுகின்றன.

**ஒரே சாதி ஒரே சாமி**

சாதிப் பாகுபாடும் தீண்டாமைக் கொடுமையும் ஒழிந்து, சமூக ஒற்றுமை மலர்ந்து, மனித குலம் இனிது வாழ அரும்பாடு பட்ட ஆன்றோர் பலர்.

**"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்!**
**கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்?"**

என்று கேட்டார் நாவுக்கரசர்.

**"சாதிகள் இலலையடி பாப்பா - குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்".**

என்றார் பாரதியார்.

**"வேறுபடும் சமயமெலாம் புகுந்து பார்க்கின்**
**விளங்குபரம் பொருளே! நின் விளையாட் டல்லால்**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**மாறுபடும் கருத்தில்லை"**

என எடுத்துரைத்தார் தாயுமானவர்.

**"பாருக்குள் ளேதெய்வம் ஒன்று - இதில்**
**பற்பல சண்டைகள் வேண்டா"**

என்று நம்மைக் கேட்டுக்கொண்டார் பாரதியார். "மனிதகுலம் ஒன்றே; எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே" என்னும் சிந்தனை எல்லார்க்கும் வரவேண்டும்.

**முடிவுரை**

சாதி மோதல்களும் சமயப் பூசல்களும் இன்னும் ஓயவில்லை.

**"ஊருக்கெல்லாம் ஒரே சாமி**
**ஒரே சாமி ஒரே நீதி**
**ஒரே நீதி ஒரே சாதி"**

என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரின் கனவை நனவாக்க எண்ணி உழைப்போமாக!

---

**1. முன்னுரை - சிக்கனமும் சிறசேமிப்பும் - சேமிப்பு பற்றிய பழமொழிகள் - சேமிக்க வழிகள் - சேமிப்பின் பயன்கள் - முடிவுரை.**

**சிக்கனமும் சிறுசேமிப்பும்**

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | 4. | சேமிக்கும் வழிகள் |
| 2. | சிக்கனமும் சிறுசேமிப்பும் | 5. | சேமிப்பின் பயன்கள் |
| 3. | சேமிப்பு பற்றிய பழமொழிகள் | 6. | முடிவுரை |

**முன்னுரை :**

**"அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை**
**பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை"** என்றனர் முதியோர்.

தானும் இன்புற்றுப் பிறரையும் இன்புறச் செய்து இனிது இல்லறம் நடத்தப் பொருள் மிகமிகத் தேவை. கசடற கற்கவும், கற்றபடி நிற்கவும் பொருள் வேண்டும். அப்பொருளினை எல்லோரும் பெற்றிருக்க இயலாது. ஆனால் எல்லாரும் அதனைச் சேமிக்க இயலும், பெருகிவரும் வெள்ளத்தை அணைகட்டி பாதுகாப்பது போல் நம்மை நாடி வரும் செல்வத்தில் ஒரு பகுதியேனும் சேர்த்து வைக்க வேண்டும். அப்படிச் சேமிப்பதன் அவசியத்தையும் பயனையும் குறிப்பதே **'சிறு துளி பெருவெள்ளம்'** என்ற சொற்றொடர்.

**சிக்கனமும் சிறுசேமிப்பும் :**

நாம் ஒவ்வொருவரும் பணத்தைச் சிக்கனமாகச் செலவிட வேண்டும். ஏனெனில் வரும் காலங்களில் அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கக் கூடும். நமது குடும்பச் செலவினங்களைத் திட்டமிட்டு செய்தால், ஒரு சிறிய அளவிலான பணத்தைச் சேமிக்க இயலும். நமது பிள்ளைகளுக்கும் சிறுவயதிலிருந்தே சிக்கனமாக இருந்து பணத்தைச் சேமிப்பது எப்படி என்று சொல்லி வளர்த்தால் அவர்களின் எதிர்காலமும் நன்றாக இருக்கும்.

**சேமிப்பு பற்றி பழமொழிகள் :**

**"சிக்கனம் நாட்டை காக்கும், சேமிப்பு வீட்டைக் காக்கும்"**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**"சிறுதுளி பெருவெள்ளம்"**

**"ஈட்டி எட்டிய மட்டும் பாயும்**

**பணம் - பாதாள மட்டும் பாயும்"** - என்பன ஆன்றோர் மொழிகள்.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற வள்ளுவன் கருத்தை மெய்ப்பிக்கும் சொற்றொடர்கள். இத்தகைய சிறப்புமிகு செல்வத்தைச் சேமித்து வைத்தல் வேண்டும். செல்வத்தின் சிறப்பினை உணராதவர் பணத்தை உல்லாசமாகவும், ஊதாரித்தனமாகவும் செலவிட்டு வானம் பார்த்த பூமிபோல் வாய் பார்த்து நிற்பர்.

**சேமிக்கும் வழிகள் :**

கூலித் தொழிலாளி முதல் ஆலைத் தொழிலாளி வரை அனைவரும் சேமிக்கலாம். சேமிப்பைப் பண்டைய தமிழ் இலக்கியங்கள் 'எய்ப்பின் வைப்பு' என உரைக்கின்றன. சேமிக்க விரும்புவோர் அவரவர் தகுதிக்கேற்ப அரசு வகுத்துள்ள கூட்டுகாலச் சேமிப்பு திட்டம், தவணைப் பரிசுப் பாத்திரம், அஞ்சல் அலுவலகத்தில் சேமிப்பு வங்கி போன்ற பல திட்டங்களில் ஏதாவது ஒன்றில் தன்னை இணைத்துக் கொள்ளலாம். இவ்வகையில் ஆயுள் காப்பீட்டுக் கழகங்களும் உதவுகின்றன. மாணவர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த 'சஞ்சாயிகா' என்ற திட்டம் பள்ளிகளில் செயல்படுகிறது.

**சேமிப்பின் பயன்கள் :**

கட்டுப்பாடற்ற மனிதனுக்குக் கட்டுப்பாட்டுணர்வு உண்டாகித் தன்னை அறியாமல் பொருள் சேர்க்கிறான். உழைக்கும் காலத்தில் சேர்க்கும் பணம் ஓய்வுக் காலத்திலும், உடல் நலங் குன்றும்போதும் குன்றென உதவுகிறது. பிள்ளைகள் படிப்புக்கும், பெண்கள் திருமணத்திற்கும் பயன்படும். அதோடு அரசின் ஆக்கப் பணிகளுக்கும் உதவுகிறது.

**முடிவுரை :**

'சிறு துளி பெருவெள்ளம்' ஆவதுபோல், சிறுக சிறுகச் சேமிப்பது பெருகி, சேமிப்போன் வருங்காலம் செம்மையுறுவதோடு மனக்கட்டுப்பாடும் உண்டாகும். இத்திட்டத்தில் நாம் நலம் பெறுதல் போல் நாடும் நலம் பெறும். எனவே, இன்பமும் துன்பமும் நிறைந்த இம்மனித வாழ்வு நிறைவான வாழ்வில் நிலைபெற நற்பணியை மேற்கொள்வோம்.

---

**நூலகம் - நூலகத்தின் தோற்றம் - நூலகத்தில் பல்வேறு பெயர்கள் - நூலகத்தின் பயன்கள் - பள்ளி நூலகம் - தமிழக நூலகங்கள்.**

**நூலகம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | 5. | பள்ளி நூலகம் |
| 2. | நூலகத்தின் தோற்றம் | 6. | பொது நூலகம் |
| 3. | நூலகத்தின் பல்வேறு பெயர்கள் | 7. | முடிவுரை |
| 4. | நூலகத்தின் பயன்கள் | | |

**முன்னுரை :**

"நூலகம் இல்லா ஊருக்கு அறிவு பாழ்" என்பது பழமொழி. நூலகம் பற்றிய செய்திகளைக் இக்கட்டுரையின் வழி காண்போம்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நூலகத்தின் தோற்றம் :**

பலவித நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ள இடமே நூலகம். நூலகம் பல்லோர் மனதைக் கவரும் வகையிலும் மனிதனுக்கு அறிவினை ஊட்டும் வகையிலும் அமைந்த ஓர் இடமாகும்.

**நூலகத்தின் பல்வேறு பெயர்கள் :**

புத்தகச்சாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசகசாலை, படிப்பகம், நூல்நிலையம், பண்டாரம் என நூலகம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நூலகம் என்னும் தமிழச்சொல்லுக்கு இணையாக ஆங்கிலத்தில் 'லைப்ரரி' என்னும் சொல் வழங்கப்படுகிறது.

**நூலகத்தின் பயன்கள் :**

மனிதனுக்குக் கல்வியறிவு மிகவும் இன்றியமையாதது. கல்லூரிகளில் நாம் படிக்கும் நூலகப் புத்தங்களால் நமக்குத் தேவையான செய்திகள் கிடைக்கின்றன. பள்ளிகளில் உள்ள நூலகம் மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவாக உள்ளது. அதுபோல் தன்னறிவுடன் செயல்படவும் நூல்கள் பயன்படுகிறது.

**பள்ளி நூலகம் :**

பள்ளி என்பது பாடநூல்களைக் கொண்டு அறிவை விதைக்கும் களம். பள்ளியும் நூலகமும் இணைபிரியாதவை. இதனால்தான், அனைத்துப் பள்ளிகளிலும் நூலகம் இடம்பெற்றுள்ளது. பள்ளியில் மாணவர்கள் ஓரிடம், நூலகம் வேறிடம் என்ற நிலையை மாற்ற, நம் பள்ளிக்கல்வித்துறை **"புத்தகப்பூங்கொத்து"** என்னும் வகுப்பறை நூலகத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. வகுப்பறை நூலகத்தில் மாணவர்கள் வயதிற்கும் மனநிலைக்கும் ஏற்ப அறிவுசார் நூலகள் இடம் பெற்றுள்ளன.

**பொது நூலகம் :**

தமிழ்நாடு அரசு மாநிலம் முழுவதும பல பொது நூலகங்களை ஏற்படுத்திக் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருகிறது. தமிழக நூலகங்கள் மாணவர்களுக்கேற்ற வகையிலும், ஆராய்ச்சிப் படிப்பிற்குத் தேவையான நூல்களையும் தன்னகத்தே வைத்துள்ளது பெருமைக்குரியதாகும்.

**முடிவுரை :**

நூல்களைப் படித்து அனைவரும் முன்னேற வேண்டும் என்பது நமது நோக்கம். நாம் நூலகங்களைப் பெரிதும் மதித்து நடந்தால் நூலகம் நம்மை உயர்த்தி விடும்.

**"நூல்களைப் படிப்போம், வாழ்வில் முன்னேறுவோம்"**

---

**கணினி (கணிப்பொறி)**

**குறிப்புச் சட்டகம்**

1. முன்னுரை
2. கணினியின் தோற்றம்
3. கணினியின் வகைகள்
4. பயன்பாடு
5. உள்ளங்கையில் உலகம்
6. கணினி வழிக் கல்வி
7. முடிவுரை

**முன்னுரை :**

கணினி ஒரு மின்னணு இயந்திரம். அது கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற கணிதச் செயல்பாடுகளைச் செய்யப் பயன்படுகிறது. கணிப்பொறி மனிதனின் அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத ஒரு சிறந்த அறிவியல் கண்டுபிடிப்பு ஆகும். அக்கணிப்பொறியினைப் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கணிணியின் தோற்றம் :**

எண் கணிதத்திற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட முதல் கருவி **அபாகஸ்.** பெருக்கலை விரைவாக செய்ய **நேப்பியர் குச்சிகள்** கண்டுபிடிக்கப்பட்டது. இன்றைய கணிப்பொறிக்கு முன்னோடியான சுழல் சக்கரக் கணிப்பானை **பாஸ்கல்** என்னும் பிரெஞ்சு அறிஞர் கி.பி. 1642-ல் வடிவமைத்தார். **கி.பி. 1822** ஆம் ஆண்டு **சார்லஸ் பாபேஜ்** என்பவர் கணிப்பொறியின் அடிப்படைத் தத்துவங்களை உருவாக்கினார். எனவே இவர் **கணிப்பொறியின் தந்தை** எனப் போற்றப்படுகிறார்.

**கணினியின் வகைகள் :**

செயல்பாட்டின் அடிப்படையில் கணினி ஒப்புமை வகை, இலக்க வகை, கலப்பின வகை என மூன்று விதமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அமைப்பு வழியில் கணிப்பொறியை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. மீக் கணிப்பொறி
2. முதல் நிலைக்கணிப்பொறி
3. சிறு கணிப்பொறி
4. நுண் கணிப்பொறி

நுண் கணிப்பொறி நான்கு வகைப்படும். அவையாவன.

1. பணி நிலையம்
2. தன்னுடைமைக் கணிப்பொறி
3. மடிக் கணிப்பொறி
4. கையடக்கக் கணிப்பொறி

**பயன்பாடு :**

கணிப்பொறி இன்று மனித வாழ்க்கையில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. தொழில்துறை, அரசாட்சி, கல்வி, மருத்துவம், வங்கி பணி, ஆராய்ச்சி, சட்டம், சமூக சேவை, இசை, ஓவியம், திரைப்படம் போன்ற பல துறைகளிலும் கணிப்பொறியின் பயன்பாடு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

**உள்ளங்கையில் உலகம் :**

கைக்கு அடக்கமாகவும், ஆற்றல் மிக்கதாவும் கணிப்பொறியின் வடிவம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. கணினிகள் மூலம் **இணையதளத்திற்கு** (Internet) வேண்டிய பெரும் வசதிகள் எளிதாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகத்தில் பல செய்திகள் மற்றும் சேவைகளை நாம் எளிதாக பெறலாம். மின்னஞ்சல் (Email), **சமூகவலைத்தளங்கள்** மூலம் செய்திகளை உடனுக்குடன் அனுப்பவும், பெறவும் முடியும்.

**கணினி வழிக் கல்வி :**

கற்றல், கற்பித்தலின் வளர்ச்சிக்கு கணினியின் பயன்பாடு பெரும்பங்கு வகிக்கின்றது. காட்சி கேள்வி மூலம் அனைத்து பாடங்களையும் மாணவர்கள் எளிதாக புரிந்துக் கொள்ள கணினி வழிக்கல்வி பயன்படுகிறது.

**முடிவுரை :**

சமுதாயத்திலுள்ள அனைவருக்கும் பயன்படும் அறிவியல் கண்டுபிடிப்புதான் கணினி. இத்தகு சிறப்புடைய கணினியைச் செயல்படுத்த அதன் மொழியினைக் கற்போம். இயக்குவோம், மிகுந்த ஆற்றலையும் அறிவையும் பெறுவோம். வெற்றி காண்போம்.

---

## பெண்கல்வி

### குறிப்புச் சட்டகம்

1. பெண் உரிமை
2. சமுதாயத்தில் பெண்கள் நிலை
3. பெண்களுக்குச் சொத்துரிமை
4. மணக்கொடை
5. பெண் கல்வியால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.penguinbooks.in

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பெண் உரிமை :**

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்றும் 'ஆணுக்கு பெண் இளைப்பில்லை' என்றும் சிந்தித்தவர் பெரியார். பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனிதசமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்க வேண்டும்.

**சமுதாயத்தில் பெண்கள் நிலை :**

பெண்கள் மனிதப்பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையை விட்டு அவர்களை வெளியேற்ற வேண்டும். பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததும் ஆகும். பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படா.

**பெண்களுக்குச் சொத்துரிமை :**

பெண்களுக்கு வழிவழிவரும் சொத்துரிமை மறுக்கப்பட்டமையே அவர்களின் அடிமை வாழ்வுக்கு அடிகோலியது. அதற்காக, அவர்கள் போராடவும் கிளர்ச்சி செய்யவும் வேண்டும்.

பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்துவிட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லாவகையான அடிமைத் தனங்களும் ஒழிந்துபோகும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே முதன்மையான காரணம். ஆதலால், பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாத உடனடிச் செயலாகும்.

**மணக்கொடை :**

தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே **மணக்கொடை** பெற்றோர் பலர், தம் மகனின் கல்விக்காகப் பணம் செலவழிப்பதனைத் தங்கள் கடமையெனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகவே கருதுகின்றனர். அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே, அவனுக்கு வரப்போகின்ற மனைவி மூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிட வேண்டுமென்று துடிக்கின்றனர். "சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான், இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும்.

**பெண் கல்வியால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள் :**

அனைத்து துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசாங்கப் பணியில் மட்டுமல்லாது அனைத்துத் துறைகளிலும் பணியாற்றுகின்றனர். இதுவே பெண் கல்வியால் ஏற்பட்ட மிகப்பெரும் சமுதாய மாற்றமாகும்.

---

**நீரின்றி இயங்காது உலகம் - நீர் நிலைகள் அடிப்படை - நீர்ப்பற்றாக்குறை ஏற்படக் காரணம். நீரைச் சேமிக்கும் வழிகள் - மழைநீரைச் சேமித்தல் - நிலத்தடி நீரைச் சேமிக்கும் வழிமுறைகள் - மரம் வளர்ப்போம் - மழைபெறுவோம்.**

**மழைநீர் சேகரிப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | 4. | நீரைச் சேமிக்கும் வழிகள் |
| 2. | நீர் நிலைகள் அடிப்படை | 5. | மரம் வளர்ப்போம் |
| 3. | நீர் பற்றாக்குறை ஏற்படக் காரணம் | 6. | முடிவுரை |

**முன்னுரை :**

தெய்வப்புலவர் "நீரின்றி அமையாது உலகு" என்றார். சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்றார். இவ்வாறு நீரின் இன்றியமையாமையும், நீரைத் தருகின்ற மழையின் சிறப்பினையும் தமிழ்ப்புலவர்கள் காலந்தோறும் போற்றி வந்துள்ளனர்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நீர் நிலைகள் அடிப்படை :**

ஆறு, ஏரி, குளம், குட்டை, கிணறு, ஊற்று போன்றவை நீர் நிலைகளின் அடிப்படைகளாகும். எனவே அவற்றைப் பாதுகாத்துத் தூய்மையாக வைத்துக்கொள்வது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**நீர் பற்றாக்குறை ஏற்படக் காரணம் :**

இந்தியா, வெப்பமண்டலப் பருவக் காற்று காலநிலையைப் பெற்றுள்ளது. இக்காலநிலை பருவ காலங்களில் மழையைத் தருகிறது. இம்மழை சீரற்ற, நிலையற்ற முறையில் பொழிகிறது. இதனால் பெரும்பாலான நேரங்களில் மழைநீர் குறைவாகவே கிடைக்கிறது. எனவே கிடைக்கும் மழைநீரைச் சேமிப்பது மிகவும் அவசியமாகிறது.

**நீரைச் சேமிக்கும் வழிகள் :**

1. மொட்டை மாடிகளில் விழும் மழைநீரைக் குழாய்கள் மூலம் நிலத்திற்கடியில் சேமித்தல்.
2. மழைநீர்த் தொட்டிகளை அமைத்து மழைநீரைப் பூமிக்கடியில் செலுத்தி நீரைத் சேமித்தல்.
3. மழைநீரை ஆழ்குழாய்க் கிணற்றுக்குள் அனுப்பி நிலத்தடியில் நீரினைச் சேமித்தல்.
4. மரங்களை வளர்த்து மழைநீரைச் சேமித்தல்.
5. ஏரி, குளம், குட்டை, கிணறு போன்ற நீர் நிலைகளைத் தூர் வாரி மழை நீரைச் சேமித்தல்.
6. ‘மழைநீர் சேகரிப்பு’ மூலம் நிலத்தடி நீரைச் சேமித்தல்.

**மரம் வளர்ப்போம் :**

காடுகள் அழிக்கப்படுவதன் மூலம் மழைவளம் வெகுவாகக் குறைகிறது. எனவே காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்த்து வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம்.

**முடிவுரை :**

மழைநீர் சேகரிப்பு மூலம் நீர் வளம் பாதுகாக்கப்படுகிறது. நாம் அனைவரும் நீரின் மதிப்பையும், பயனையும் உணர்ந்து அதனை வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும்.

**“மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்”**

---

## நான் விரும்பும் நூல்

**முன்னுரை**

**வெல்லாத இல்லை**
**திருவள்ளு வன்வாய் விளைத்தவற்றுள்**
**பொல்லாத தில்லை**
**புரைதீர்ந்த வாழ்வினி லேயழைத்துச்**
**செல்லாத தில்லை**
**பொதுமறை யான திருக்குறளில்**
**இல்லாத தில்லை**
**இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே**

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் போற்றப்பெற்ற திருக்குறளே நான் விரும்பும் நூலாகும். திருக்குறளைப் போற்றாத நாடில்லை; மதமில்லை. இதனை இயற்றியவர் திருவள்ளுவர்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



"புலவர் என்னும் தகுதிக்குரியவர் திருவள்ளுவர் ஒருவரே" என்று கூறியுள்ளார் மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார் என்னும் பழந்தமிழ்ப்புலவர்.

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

என்று பாடியுள்ளார் பாரதியார். 'முதற்பாவலர்', 'தெய்வப் புலவர்', 'செந்நாப்போதார்' எனத் திருவள்ளுவர்க்குச் சிறப்புப் பெயர்கள் பல உள.

**நூலமைப்பு**

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப் பால் என மூன்று பால்களைக் கொண்டது. 133 அதிகாரங்களும், அதிகாரத்துக்குப் பத்து வீதம் 1330 குறட்பாக்களும் கொண்டது.

**வேறு பெயர்கள்**

'தமிழ்மறை', 'பொதுமறை', 'பொய்யா மொழி', 'வாயுறை வாழ்த்து', 'முப்பால்', 'உத்தரவேதம்', 'தெய்வநூல்' முதலியன இந்நூலின் வேறு பெயர்கள்.

**நூற்பெருமை**

புலவர் பலர் புகழ்ந்து பாடியுள்ள திருவள்ளுவ மாலை இந்நூலின் பெருமையை விளக்குகிறது. உலக மக்கள் அனைவர்க்கும் பொருந்தும் வகையில் அறக்கருத்துகளையும் வாழ்வியல் உண்மைகளையும் கூறுவதால் 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்பெறுகிறது. பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்றுள்ளது.

**கருத்துக் களஞ்சியம்**

அறம் 'சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும்' என்று கூறிய வள்ளுவர், 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' என்று அறத்திற்கு விளக்கம் தந்து, 'அன்றறிவாம் என்னாது அறம் செய்க' என்கிறார்.

'அன்பின் வழியது உயிர்நிலை', 'நன்றி மறப்பது நன்றன்று', 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்', 'கேடில் விழுச்செல்வம் கல்வி', 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்', 'முயற்சி திருவினையாக்கும்' என்பன போன்ற குறள்மொழிகள் நம் வாழ்வை உயர்த்தும் அருள்மொழிகள்.

**முடிவுரை**

தமிழன்னைக்கு மணிமுடியாய் விளங்கும் திருக்குறளின் பெருமை மேன்மேலும் ஓங்க ஆவன செய்வதே தமிழர்க்குக் கடமை. குறளைப் படிப்போம்; அதன் வழி நடப்போம்.

---

## இளைஞர்களும் இந்திய ஒருமைப்பாடும்

**முன்னுரை**

மொழியால், இனத்தால், மதத்தால், பழக்கவழக்கங்களால் நம் நாட்டு மக்கள் வேறுபட்டவர் என்றாலும், சிந்தையால், சொல்லால், செயலால் ஒன்றுபட்டு விளங்கினால்தான் ஒருமைப்பாடு பிறக்கும்; நாடு சிறக்கும்; உரிமை நிலைக்கும். இந்திய ஒருமைப்பாட்டில் இளைஞர் பங்கு இன்றியமையாதது. அதனால்தான்,

**"இளையபார தத்தினாய் வா வா வா**
**எதிரிலா வலத்தினாய் வா வா வா"**

என்று இளைஞர்களை இனங்கண்டு எழுச்சி கொண்டு வரவேற்று,



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**"ஒற்றுமைக்குள் உய்யவே நாடெல்லாம்**

**ஒருபெருஞ் செயல் செய்வாய்"**

என்று ஆணையிடுகிறார் பாரதி.

**அகத்தடை**

இன்று நம் நாட்டில் நிலவும் சாதி மத மொழி வெறிகளே இந்திய ஒருமைப்பாட்டுக்கு அகத்தடைகள்.

**புறத்தடை**

அரசியல் பொருளியல் ஆதாயம் கருதி இந்திய ஒருமைப்பாட்டுக்கு உலை வைப்பவர் தொகை பெருகிவருகிறது. இவர்களுள் பெரும்பாலானவர் இளைஞர்களே. அவர்களுக்கு வெளிநாடுகள் சில வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றன. பஞ்சாப், அசாம் போன்ற மாநிலங்களில் தீவிரவாதிகள் பெருகக் காரணமாய் விளங்கும் வெளிநாடுகளே நம் ஒருமைப்பாட்டுக்குப் புறத்தடைகள்.

**இளைஞர் கடமை**

**"பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்**

**நற்றவ வானினும் நனிசிறந் தனவே"**

என்ற பாரதியின் உணர்வை இளைஞர்கள் பெறவேண்டும். ஒற்றுமையின்மையால் நம் நாடு அடிமைப்பட்டதும், பின்னர் ஒன்றுபட்டுப் போராடியதால் உரிமை பெற்றதும் வரலாறு தந்த படிப்பினைகள். இளைஞர்கள் எந்தப் பிரிவினை சக்திக்கும் ஆளாகாமல், நாட்டு ஒருமைப்பாடு ஒன்றே உயிர்மூச்சாய்க் கொள்ள வேண்டும்.

சாதிகள் தொலையவேண்டுமானால், திரு.வி.க. கூறியபடி இளைஞர்கள் கலப்புமணம் புரிதல் வேண்டும். சாதிச் சங்கங்களில் சேராமல் அவற்றை ஒதுக்கி வைத்து ஒழிக்க வேண்டும்.

**"வேறுபாடும் சமயமெலாம் புகுந்து பார்க்கின்**

**விளங்குபரம் பொருளே! நின் விளையாட் டல்லால்**

**மாறபடு கருத்தில்லை".**

என்ற தாயுமானவர் கூற்றை மக்களிடையே பரப்பி, சமய வெறி நீக்கி, மனிதநேயம் காக்க இளைஞர்கள் முன்வரவேண்டும்.

மொழிவெறி தொலைய எல்லா மொழிகளுக்கும் சம வாய்ப்பும் உரிமையும் கிடைக்க இளைஞர்கள் அமைதி வழியில் முயலுதல் வேண்டும்.

**முடிவுரை**

"வேற்றுமையில் ஒற்றுமையே இந்தியாவின் தனித்தன்மை" என்றார் அறிஞர் இராதாகிருஷ்ணன்.

**"ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே - நம்மில்**

**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"**

என்றார் பாரதி. இவற்றைக் கருத்திற் கொண்டு இளைஞர்கள் உழைக்க வேண்டும். இந்திய ஒருமைப்பாடு தழைத்துச் செழித்து நிலைக்க வேண்டும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கட்டாய இராணுவப் பயிற்சி

**முன்னுரை**

**"அமிழ்தில் இனியதடி பாப்பா - நம்**
**ஆன்றோர்கள் தேசமடி பாப்பா"**

என்றார் பாரதி. எந்த நாட்டவராயினும் தம் சொந்த நாட்டின்மீது பற்றுடையவராய் இருந்து, அந்த நாட்டைக் காப்பது இன்றியமையாதது. எல்லா நாடுகளிலும் படைகள் உண்டு. போதுமான படைவலிமை இல்லாதபோது கட்டாயப் படைப் பயிற்சி தேவைப்படுகிறது.

**பகை இரு வகை**

ஒவ்வொரு நாட்டிற்கும் அகப்பகை, புறப்பகை என இரண்டு உண்டு. இரண்டினின்றும் நாட்டைக் காத்தல் வேண்டும். இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் நிலநடுக்கம், வெள்ளப்பெருக்கு போன்றவை அகப்பகை. மண்ணாசையும் பொன்னாசையும் கொண்டு போர் தொடுக்க வரும் நாடுகளே புறப்பகை.

**படை வகைகள்**

அறிவியல் வளராத அந்தக் காலத்தில் காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை என்று நால்வகைப் படைகள் இருந்தன. இப்போது உலகமெங்கும் தரைப்படை, கடற்படை, விமானப்படை என முப்படைகள் உள்ளன.

**இன்றியமையாமை**

போர்ப்பயிற்சி பண்டைக்காலம் தொட்டே இருந்துவருகிறது. இக்கட்டான வேளைகளில் வீட்டுக்கொரு மகனைப் போருக்கு அனுப்பி மகிழ்ந்துள்ளனர் அக்கால மக்கள், புறமுதுகு காட்டாத வீரமகனையே போற்றியிருக்கின்றனர் அக்காலத் தாய்மார்கள். இக்காலத்திலும் இக்கட்டான வேளைகளில் போருக்குச் செல்லவும், இயற்கைச் சீற்றங்களின்போது மக்களை அழிவிலிருந்து மீட்கவும் போர்ப்பயிற்சி இன்றியமையாததே.

**எல்லா இளைஞர்க்கும் பயிற்சி**

நம் நாட்டில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேசிய மாணவர் படை வாயிலாகத் தரைப்படைப் பயிற்சியும் கடற்படைப் பயிற்சியும் அளிக்கப்பெறுகின்றன. விருப்பமுள்ள மாணவர் மட்டுமே சேர்கின்றனர். உடல்வளம் உள்ள எல்லா மாணவர்கட்கும் இப்பயிற்சிகளைக் கட்டாயமாக்க வேண்டும். அது மட்டுமல்லாமல், கற்கும் வாய்ப்பின்றி உழைத்து வாழுகின்ற இளைஞர்களுக்கும் இப்பயிற்சி கட்டாயம் வேண்டும்.

**பயன்கள்**

எல்லா இளைஞர்களுக்கும் கட்டாயப் படைப் பயிற்சி தருவதால் இயற்கைச் சீற்றங்களின்போது அப்பகுதி இளைஞர்களே மக்களை அழிவிலிருந்து மீட்கும் பணியை மேற்கொள்ளலாம். எல்லை காக்கும் வீரர்களை அலைக்கழிக்க வேண்டியதில்லை. போர்நெருக்கடி நேரங்களில் படைவலிமையைக் கூட்டுதல் எளிதாகும். சீனரும் பாகித்தானியரும் நமக்குத் தொல்லை தர அஞ்சுவர்.

**முடிவுரை**

ஆலந்து, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் கட்டாயப் படைப் பயிற்சி உள்ளது.

**"பாரத பூமி பழம்பெரும் பூமி**
**நீரதன் புதல்வர்;இந் நினைவகற் றாதீர்"**

என்ற பாரதியின் பாடல்வரிகளை நெஞ்சில் நிறுத்தி, படைப் பயிற்சி பெற்று, நாட்டைக் காப்பதே இந்திய இளைஞர்க்குப் பெருமை. அதற்கு ஆவன செய்வது இந்திய அரசின் கடமை.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## சாரணர் இயக்கம்

**முன்னுரை**

தன்னலம் மட்டும் கருதி வாழ்பவரை வரலாறு மதிப்பதில்லை. பொதுநலம் கருதி உழைப்பவரை வரலாறு மறப்பதில்லை. மாணாக்கர்க்குப் பொதுநல நாட்டம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே பள்ளிகளில் சாரணர் இயக்கம் செயற்படுத்தப்படுகிறது.

**தோற்றம்**

1899-இல் தென்னாப்பிரிக்காவில் நிகழ்ந்த போயர் போரில் படுகாயமடைந்த வீரர்களுக்கு மருத்துவம் செய்வதிலும் பிற பணிகளிலும் இளைஞர்களை ஈடுபடுத்திப் பெருவெற்றி கண்டார் பேடன் பவல். அதன் விளைவாக 1907-இல் இருபது இளைஞர்களுடன் பிரவுன் கடல் தீவில் பாசறை அமைத்துத் தங்கினார். ஒழுக்கம், கட்டுப்பாடு, முழு வழிப்பு, கூட்டுப் பொறுப்பு, தோழமை, சூழலுக்கு ஏற்ப வாழும் முறை முதலியவற்றில் சிறந்த பயிற்சியளித்தார். இதுதான் முதல் சாரணர் இயக்கம். பிறகு உலகம் முழுவதும் இது பரவிற்று.

**பிரிவும் கொள்கையும்**

சாரணர் இயக்கம் முப்பிரிவுகள் கொண்டது. இவ்வியக்கத்தில் பெண்களும் சேரலாம். ஆண்கள் பிரிவில் குருளையர், சாரணர், பெருஞ்சாரணர் என மூன்று பிரிவுகளும், பெண்கள் பிரிவில் புல்புல் பறவையர், சாரணியர், பெருஞ்சாரணியர் என மூன்று பிரிவுகளும் உள்ளன.

சாரணரின் முக்கியக் கொள்கை "எப்போதும் அணியமாய் இரு" (Be Prepared) என்பதாகும்.

**உறுதிமொழி**

சாரணர் மூன்று உறுதிமொழிகளைக் கூற வேண்டும். அவை

1. கடவுள், அரசு, தாய்தந்தையர், பெரியோர் ஆகியோர்க்கு என் கடமையை ஆற்றுவேன்.
2. பிறர்க்கு உதவ எப்போதும் அணியமாய் இருப்பேன்.
3. சாரணர் இயக்க விதிகளுக்குக் கட்டுப்படுவேன்.

சாரணர் மூன்று விரல்களால் வணக்கம் செய்வது இம்மூன்று உறுதிமொழிகளையும் நிறைவேற்றுவோம் என்பதைக் குறிப்பதாகும்.

**பத்து விதிகள்**

மானம், பக்தி, பிறர்க்குதவுதல், உடன்பிறப்பு மனப்பான்மை, மரியாதை, உயிரிரக்கம், அடக்கம், துணிவு, சிக்கனம், மனம், மொழி, மெய் ஆகியவற்றில் தூய்மை ஆகிய பத்தும் சாரணர் இயக்க விதிகள்.

**பணிகள்**

திருவிழாக் கூட்டங்களில் பெற்றோரை விட்டுப் பிரிந்த குழந்தைகளை உரியவரிடம் சேர்த்தல், காயமுற்றோர்க்கு முதலுதவி செய்தல் போன்ற பொதுப்பணிகளே இவ்வியக்கத்தின் பணிகளாகும்.

**முடிவுரை**

மாணவர்கள் சாரணர் இயக்கத்தில் சேர்ந்து பணி செய்தால் நற்பண்புகள் பெற்று நற்குடிமக்களாய் வாழ்வர்; பிற்காலத்தில் நல்ல தொண்டராகவும் விளங்குவர்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர் பங்கு

**முன்னுரை**

"நோய்க்கு இடங்கொடேல்" என்கிறது ஔவையின் ஆத்திசூடி. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்கிறது பழமொழி. நோயற்ற வாழ்வுக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இன்றியமையாதது.

**நீர்த்தூய்மை காத்தல்**

சாக்கடை நீர், தொழிற்சாலைக் கழிவுநீர் ஆகியவை கலப்பதால் ஆறுகளும் நீர்நிலைகளும் மாசுபடுகின்றன. இதனால் நல்ல குடிநீர் கிடைத்தல் அரிதாகிறது; நோய் பரவல் எளிதாகிறது. எனவே, நீர்த்தூய்மை காக்கத் தொழிற்சாலைக் கழிவுநீரைத் தூய்மையாக்கும் முறையைக் கையாண்டு நச்சுத்தன்மை போக்கவேண்டும். படிய வைக்கும் தொட்டிகள் கட்டிக் கழிவுநீரைத் தேக்கி, மிதக்கும் மாசுகளை அகற்றவேண்டும். காற்றோட்டத் தொட்டிகளில் உள்ள கழிவுநீரில் சுண்ணாம்பு சேர்த்து, நச்சுத்தன்மை நீக்கி, வாய்க்கால் வழியே வெளியேற்ற வேண்டும்.

**நிலத்தூய்மை காத்தல்**

பயிர்களுக்குச் செயற்கை உரங்களையும் பூச்சிகொல்லி மருந்துகளையும் அதிகமாகப் பயன்படுத்துவதால் நிலத்தின் தரமும் குறைகிறது; தூய்மையும் கெடுகிறது; உணவுப் பொருள்களிலும் நச்சுத்தன்மை புகுகிறது. இவற்றைத் தடுக்க இயற்கை உரங்களையே பயன்படுத்த வேண்டும்.

**காற்றுத் தூய்மை காத்தல்**

நிலவூர்திகள், தொழிற்சாலைகள், அனல்மின் நிலையங்கள், அணுமின் உலைகள் முதலியவற்றால் வெளிப்படும் புகை, தூசு, சாம்பல், கதிர்வீச்சு முதலியன காற்றைப் பாழ்படுத்துகின்றன. ஆதலால், நாம் மாசுபட்ட காற்றையே உட்கொள்ள முடிகிறது; நம் உடல்நலமும் கெடுகிறது. ஆதலால், தொழிற்சாலைகளை மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் பரிந்துரைப்படி அமைத்து நடத்தவேண்டும்.

**மாணவர் கடமை**

மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் இன்றியமையாமையை மக்களுக்கு விளக்கிச் சொல்லவேண்டும்; கண்ட கண்ட இடங்களில் துப்புதல், குப்பை கொட்டுதல், சிறுநீர் கழித்தல், மலங்கழித்தல் முதலியன தவிர்க்குமாறும், குடிநீரைக் காய்ச்சிப் பருகுமாறும் அறிவுறுத்தல் வேண்டும்; விதிகளுக்கு மாறாகத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டாலும் செயற்பட்டாலும் அதனை மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

**முடிவுரை**

ஒவ்வோராண்டும் சூன் ஐந்தாம் நாளை உலகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நாளாகக் கொண்டாடி வருகிறோம். ஒவ்வொரு நாளும் நம் இருப்பிடத்தையும் சுற்றுச் சூழலையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், நம்மை நோய்கள் நெருங்கும்; நமது வாழ்நாள் சுருங்கும்.

**"புறந்தூய்மை நீரா னமையும்; அகந்தூய்மை**
**வாய்மையாற் காணப் படும்"**

என்னும் வள்ளுவர் வாக்கை என்றும் மறவாமல் அகமும் புறமும் தூய்மை காப்போம்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## செஞ்சிலுவைச் சங்கம்

**முன்னுரை**

1859-இல் இத்தாலியில் சால்பெரீனா என்ற ஊரில் கடும்போர் நடந்தது. பிரான்சு மன்னன் நெப்போலியனும் ஆத்திரியா மன்னன் பிரான்சிசு சோசப்பும் மோதினர். பலர் உயிரிழந்தனர். குற்றுயிராய்க் கிடந்தோர் நாவற்றி நீர் கேட்டுத் தவித்தனர். இக்கொடுமையைக் கண்டு பதறிய சுவிட்சர்லாந்து வங்கி முதலாளி என்றி டியூனண்டு விரைந்து நீர் கொணர்ந்து கொடுத்தார். பலரைத் துணைக்கு அழைத்து வந்து மருந்திட்டார். இந்நிகழ்வே செஞ்சிலுவைச் சங்கம் தோன்றக் காரணமாயிற்று.

**தோற்றம்**

இந்நிகழ்ச்சியால் நெகிழ்ந்த என்றிடி யூனண்டு நூலொன்று எழுதி, இதுபோலப் போரினால் காயமுறுவாரைக் காக்க இயக்கம் ஒன்று தேவை என்று குறிப்பிட்டார். பெருமுயற்சியுடன் சுவிட்சர்லாந்தில் ஓர் இயக்கத்தையும் நிறுவினார்.

**சின்னம்**

சுவிட்சர்லாந்தின் கொடி செந்நிறத் துணியில் வெண்ணிறச் சிலுவையைக் கொண்டது. அதை நினைவுகூரும் வகையில் வெண்ணிறத் துணியில் செஞ்சிலுவை இட்ட கொடி சின்னமாக அமைக்கப்பெற்றது. இதனால் இவ்வியக்கத்திற்குச் 'செஞ்சிலுவைச் சங்கம்' என்பது பெயராயிற்று.

இச்சங்கம் உலகெங்கும் பரவியது. இசுலாம் நாடுகள் சிலுவைக் குறியிடாமல் பிறைக்குறி இட்டன. இதனால் அந்நாடுகளில் 'செம்பிறைச் சங்கம்' என்ற பெயரில் இவ்வியக்கம் இயங்கலாயிற்று.

**நோக்கம்**

போரில் புண்பட்டோர்க்குப் பாகுபாடின்றி மருத்துவம் செய்தலும், கைதிகளை உரியவரிடம் ஒப்படைத்தலும் இதன் தொடக்கக் கால நோக்கங்கள். பின்னர் அமைதிக் காலத்தில் உடல்நலம் பேணல் முதலியன குறிக்கோளாயின.

**வளர்ச்சி**

1863-இல் பதின்மூன்று நாடுகளில் இதன் கிளைச்சங்கம் நிறுவப்பெற்றது. இப்போது 74 நாடுகளில் இதன் கிளைச் சங்கங்கள் உள்ளன.

**பணிகள்**

போர்க்காலத்தில் புண்பட்டோர்க்கு முதலுதவி அளித்தல், நோவுற்றார்க்கு மருத்துவம் செய்தல், கைதிகளைக் காத்து உரிய நாடுகளுக்கு அனுப்புதல் ஆகியவற்றை இச்சங்கம் செய்கிறது. 1949-இல் இச்சங்கத்தின் அமைதிக்காலப் பணிகள் மூன்று துறைகளாகப் பிரிக்கப்பட்டன. மக்களின் உடல்நலம், மகப்பேற்றுக் கால உதவி, தாய்சேய் நலம் முதலியவற்றை இரண்டாம் துறை கவனிக்கிறது. இயற்கைச் சீற்றங்களின் போது உயிர் காத்தல், உணவும் உடையும் வழங்கல் முதலியவற்றை மூன்றாம் துறை கவனிக்கிறது.

**முடிவுரை**

தன் நாட்டவர்க்கு மட்டுமன்றி எந்நாட்டவர்க்கும் தொண்டு செய்யும் இச்சங்கம் இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அமைக்கப்பெற்று நன்கு செயற்படுகிறது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## நாட்டு ஒருமைப்பாட்டில் மாணவர் பங்கு

**முன்னுரை**

மொழியால் இனத்தால், மதத்தால், பழக்கவழகங்களால் நம் நாட்டு மக்கள் வேறுபட்டவர் என்றாலும், சிந்தையால், சொல்லால், செயலால் ஒன்றுபட்டு விளங்கினால்தான் ஒருமைப்பாடு பிறக்கும்; நாடு சிறக்கும்; உரிமை நிலைக்கும். நாட்டு ஒருமைப்பாட்டில் மாணவர் பங்கு இன்றியமையாதது. ஏனெனில், இன்று ஏடு தூக்கும் இவர்களே நாளை நாடு காக்கும் தலைவர்களாகவும், அறிஞர்களாகவும், நல்ல குடிமக்களாகவும் விளங்க இருக்கிறார்கள்.

**பரந்த நோக்கு**

மாணவர்கள் விரிந்த மனமும் பரந்த நோக்கமும் உடையவராய்த் திகழ்தல் வேண்டும். பிற மாநில மொழிகளையும் பண்பாட்டையும் இழித்தும் பழித்தும் பேசலாகாது. தத்தம் மாநிலத்தின் மீதும் மொழியின்மீதும் பற்று இருத்தல் வேண்டும். அது வெறியாக மாறிவிடக்கூடாது.

**பிற மொழி கற்றல்**

எம்மொழியும் யார்க்கும் பகையன்று. பிற மொழிகளைக் கற்றுத் திறன் பெற்றுப் பயனுற்று வாழ்வது தமக்குப் பெருமை என்பதை உணர வேண்டும். நம் மொழிச்சிறப்பை பிறர்க்குத் தெரிவிக்கவும், பிறர்மொழிச் சிறப்பை நாம் தெரிந்துகொள்ளவும் பிற மொழிகளைக் கற்றல் இன்றியமையாதது.

**ஒருமைப்பாட்டுக்கு வழிகள்**

ஆண்டுக்கு ஒரு முறையாவது பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேசியச் சுற்றுலா நடத்திப் பிற மாநிலங்கள் பற்றிய அறிவையும், பிற மாநிலத்தார் உறவையும் மாணவர்கள் பெறச் செய்யலாம்.

விடுதலை நாள், குடியரசு நாள், காந்தி பிறந்த நாள், குழந்தைகள் நாள், இந்திய ஒருமைப்பாட்டு நாள் போன்ற தேசிய விழாக்கள் நடத்தி மாணவர்களைப் பங்கேற்கச் செய்யலாம்.

அனைத்து மாநில விளையாட்டுப் போட்டிகளும் ஒருமைப்பாட்டு உணர்வைத் தோற்றுவித்து வளர்க்கும்.

பிற மாநில மக்களின் கலை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றைச் சித்தரிக்கும் திரைப்படங்களை மாணவர்களுக்குக் காட்டப் பள்ளிகளும் கல்லூரிகளும் ஏற்பாடு செய்யலாம்.

**மாணவர் அமைப்புகள்**

கல்வி நிறுவனங்களில் செயற்படுகின்ற தேசிய மாணவர் படை, நாட்டுத் தொண்டுத் திட்டம், சாரணர் இயக்கம், சமூகப் பணிக்குழு போன்றவற்றில் மாணவர்கள் பங்கேற்றுத் தொண்டுள்ளமும் ஒருமைப்பாட்டு உணர்வும் பெறலாம்.

**முடிவுரை**

இந்து இசுலாம் ஒற்றுமைக்காக உழைத்து உயிர் கொடுத்த காந்தியடிகள், சாதி மத வேற்றுமைகள் நீங்கிச் சமுதாய ஒற்றுமை ஓங்க உழைத்த தந்தை பெரியார், வள்ளலார், அற நூல்கள் வாயிலாக மனித குல ஒற்றுமையை மாண்புறச் செய்த திருவள்ளுவர், ஔவையார், கவிதைகள் வாயிலாக நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் ஊட்டிய பாரதியார், நாமக்கல் கவிஞர் போன்றோர் வழியில் மாணவர்கள் நாட்டு ஒருமைப்பாடு தழைக்கவும் நிலைக்கவும் உழைப்பார்களாக!



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



~~சுற்றுச்சூழல் சீர்கேடு - காற்று மாசு - நீர் மாசு - நிலம் மாசு - ஒலி மாசு - தவிர்க்கும் முறைகள் - மாணவர் பங்கு.~~

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

### குறிப்புச் சட்டகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | 5. | ஒலி மாசு |
| 2. | காற்று மாசு | 6. | தடுக்கும் முறைகள் |
| 3. | நீர் மாசு | 7. | மாணவர் பங்கு |
| 4. | நிலம் மாசு | 8. | முடிவுரை |

**முன்னுரை**

சுற்றுச்சூழலை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்றும், அது எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**காற்று மாசு :**

தொழிற்சாலை, வாகனம் போன்றவற்றிலிருந்து வரும் புகை மூலம் இயற்கைக் காற்று மாசடைகிறது. பிளாஸ்டிக் போன்ற பொருள்களை எரிப்பதன் மூலமும் மாசடைகிறது. இதனைக் காற்று மாசடைதல் என்கிறோம்.

**நீர் மாசு :**

குளம், குட்டை, ஏரி போன்ற நீர் நிலைகளில் குப்பைகளை வீசுவதன் மூலமும் தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுகள் மூலமும் நீர் மாசடைகிறது. இதனை நீர் மாசடைதல் என்கிறோம்.

**நிலம் மாசு :**

நிலத்தில் கழிவுகளைக் கொட்டுவதன் மூலமும், மலம் மற்றும் எச்சில் துப்புதல் போன்றவற்றின் மூலமு் நிலம் மாசுபாடு அடைகிறது. இதனை நிலம் மாசடைதல் என்கிறோம்.

**ஒலி மாசு :**

சாலைகளில் வாகனங்கள் எழுப்பும் ஒலியும், ஒலிபெருக்கி, வானொலி மற்றும் குறும்படங்கள் மூலம் வரும் ஒலியைக் கேட்கும் போதும் மனிதனின் கேட்கும் திறன் பாதிக்கப்படுகிறது. இதனை ஒலி மாசு என்கிறோம்.

**தடுக்கும் முறைகள் :**

குளோரோ - புளோரோ கார்பன் அளவைக் குறைத்து ஓசோன் படலத்தைப் பாதுகாக்க வேண்டும். நீர்நிலைகளை அசுத்தப்படுத்தாமல் இருக்க வேண்டும். நிலத்தில் குப்பை மற்றும் (நெகிழிகளை) பிளாஸ்டிக் கொருட்களை எரிக்கக் கூடாது. பொது இடங்களில் ஒலி எழுப்புதல் கூடாது.

**மாணவர் பங்கு :**

காற்று மாசுபடுதலைத் தடுக்க மாணவர்களாகிய நாம் பலவழிகளைப் பொது மக்களிடையே எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். நீர், நிலம், ஒலி ஆகியவை மாசடைவதைத் தடுக்க வானொலி, தொலைக்காட்சி மற்றும் குறும்படங்கள் மூலம் விளம்பரம் செய்யலாம்.

**முடிவுரை :**

இயற்கை தந்தச் சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்! ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வோம்!.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மாணவரும் சமுதாயத் தொண்டும்

**குறிப்புச் சட்டகம்**

1. முன்னுரை
2. சமூகப் பணிகள்
3. அறிவொளி தீபம்
4. சமுதாய வேறுபாடுகள்
5. மாணவரின் பங்கு
6. சமூக இயக்கங்கள்
7. முடிவுரை

**முன்னுரை :**

நம் இந்திய நாடு பழம்பெரும் நாடு. உலகில் உள்ள மிகப் பெரிய நகரங்களில் ஏழாவது நாடு. வற்றாத நதிகளும், வளம் குன்றாத காடுகளும் மரங்களும் மலைகளும் கடல்களும் நிறைந்த நாடு. பலரின் சீரியத் தொண்டு உள்ளத்தாலும் சிறந்த நாடாக திகழ்கிறது. அத்தகைய சிறப்புடைய இந்தியாவின் சிறப்பினையும் பண்பாட்டினையும் மேலும் காப்பதில் மாணவர் பங்கு அதிகமாக உள்ளது. சமூகத்திற்காக தன்னலம் கருதாது உழைக்கும் மாணவர்களைச் செம்மைப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**சமூகப் பணிகள் :**

ஒரு நாட்டின் முன்னேற்றம் முக்கியம் என்பதனை அறிந்த பெரியோர்கள் அவற்றை நிறைவேற்றிட மாணவர்களையே அழைத்தனர். ஒரு நாட்டின் வளர்ச்சிப் பணியா! உரிமைப் போரா! புரட்சி போராட்டமா! பகுத்தறிவு வளர்ச்சியா! பண்பாட்டு விடியலா! அனைத்திற்கும் பின்புலமாக நிற்பவர்கள் மாணவர்கள்தானே. நாடு முன்னேற பல்வேறு திட்டங்களைத் தீட்டினாலும் அவற்றை நிறைவேற்ற விடாமல் புற்றுநோய்போல சில அவலங்கள் உள்ளன

**"தீண்டாமை, அறியாமை, மூடப்பழக்கங்கள், இனவேறுபாடு, வன்முறைக் கொடுமை"**

இவற்றிலிருந்து மக்களை மீட்டெடுத்து நல்ல சமூகத்தை உருவாக்கும் திறன் மாணவர்களிடையே உள்ளது. சமூகப் பணிகளின் விளைநிலமே மாணாக்கர்கள்தானே.

**அறிவொளி தீபம் :**

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதனை உணர்ந்த மாணவர்கள் தாம் பெற்றக் கல்வியை இலவசமாக மக்களுக்கு வழங்கிட வேண்டும்.

1. அறியாமையில் உள்ள மக்களுக்கு அறிவூட்ட வேண்டும்.
2. முதியோருக்கு கல்வி வழங்கும் அறிவொளி திட்டத்தை நடத்திட வேண்டும்.
3. அறிவு தீபமே இருண்ட வீட்டை ஒளியுள்ள ஆலயமாக மாற்றும் என்பதனை உணர்ந்திட வேண்டும்.

**சமுதாய வேறுபாடுகள் :**

"கண் மூடிபழக்கமெல்லாம் மண்மூடிபோக..." என்பதற்கேற்ப,

1. உயர்ந்தோர் தாழ்ந்தோர் வேறுபாட்டை அகற்றல்,
2. ஏழை பணக்காரன் உணர்வினை நீக்கல்,
3. ஆண் பெண் வேறுபாடுகளால் மக்களிடையே ஏற்படும் தீமைகளை விலக்கல் வேண்டும்.

மூடப்பழக்கவழக்கங்கள், தீண்டாமை, வரதட்சனைக் கொடுமை, பெண்களை இழிவுப்படுத்துதல் போன்ற தீமைகளை ஒழித்திட மாணவர்கள் பாடுபட வேண்டும்.

**மாணவரின் பங்கு :**

1. தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து சமூக சேவைகளை செய்ய வேண்டும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



2. கிராம மக்களுக்கு பயனுள்ள தொழில் முறைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

3. தரமான சாலைகள் அமைத்திட உதவலாம்.

4. தூய்மை இந்தியா திட்டம் பற்றி எடுத்துச் சொல்லுதல்,

5. அறிவியல் வளர்ச்சியை எடுத்துச் சொல்லுதல்,

6. சுகாதாரமின்மையால் உடலில் ஏற்படும் நோயினையும் அவற்றை தடுப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்துச் சொல்லுதல் வேண்டும்.

7. விழாக்காலங்களில் பொது மக்களுக்கு உதவலாம்.

**சமூக இயக்கங்கள் :**

சமூகப் பணிகளை இணைந்து செய்வதற்காக மாணவர்களின் பொதுநல இயக்கங்களாகிய,

1. சாரணர் இயக்கம் 2. தேசிய மாணவர் படை

3. தேசிய சமுதாயத் தொண்டர் 4. செஞ்சிலுவை இயக்கம்

5. பசுமை படை போன்ற பல இயக்கங்களில் தன்னை ஈடுபடுத்தி தொண்டாற்ற வேண்டும்.

**முடிவுரை :**

**"என் தாய் நாடு இந்தியா,**
**இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள்"**

என்பதனை உணர்ந்து அழிவிலிருந்து இச்சமூகத்தை காத்திட வேண்டும்.

**"உடல் தளராது உள்ளம் சுருக்காது,**
**சுறுசுறுப்பாய் செயல்பட வேண்டும்..."**

சமுதாயத்தில் மண்டி கிடக்கும் முட்புதர்களான தீண்டாமை, வறுமை, அறியாமை போன்ற அநீதிகளை எதிர்த்து போரிட வேண்டும். இதனால் நம் வீடும் நாடும் நலம் பெறும்.

---

## தேசிய ஒருமைப்பாடு

**முன்னுரை**

ஒரு நாட்டு மக்கள் பல்வேறு மொழியினராக, பல்வேறு மதத்தினராக, பல்வேறு இனத்தினராக இருக்கலாம். அவர்கள் இவை போன்ற வேறுபாடுகளைக் கடந்து, ஒன்றாய் இணைந்து வாழ்வதே தேசிய ஒருமைப்பாடாகும்.

**"முப்பது கோடி முழுமையும் வாழவோம் - வீழில்**
**முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்"**

என்ற பாரதியின் முழக்கம் தேசிய ஒருமைப்பாட்டுக்குச் சரியான விளக்கம்.

**வேற்றுமையின் இழிவு**

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பதை மறந்த மன்னர்களாலும், சாதி சமய வேறுபாட்டால் சண்டையிட்டுக்கொண்ட மக்களாலும் நம் நாடு ஆங்கிலேயர்கரு அடிமைப்பட்டது. வணிக நோக்குடன் வந் ஆங்கிலேயர் நாட்டு வளத்தையும் நம் உழைப்பையும் சுரண்டினர். நம்மவரோ அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்திற் கொண்டு துன்பத்தில் உழன்றனர்.

**ஒற்றுமையின் உயர்வு**

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே" என்றார் பாரதி. நான்கு எருதுகள் ஒன்றுபட்டு வாழ்ந்தபோது, அவற்றால் ஒரு சிங்கத்தையே விரட்ட முடிந்தது என்பது ஒற்றுமையின் வலிமையை உணர்த்தும் கதையாகும். அண்ணல் காந்தி,



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

திலகர், வ.உ.சி. போன்றோர் மக்களை ஒன்றுபடுத்திப் போராடியதால்தான் நம் நாடு விடுதலை பெற்றது என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

**வேற்றுமையில் ஒற்றுமை**

"Unity in diversity is the peculiarity of India" என்றார் நம் முன்னாள் குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இந்தியாவின் தனித்தன்மை என்பது இதன் பொருள். இந்தியர் அனைவரும் சிந்தையால், சொல்லால், செயலால் ஒன்றுபட்டு வாழ்ந்தால் வேற்றுமை நீங்கும்; ஒற்றுமை ஓங்கும்.

**ஒருமைப்பாட்டுக்கு வழிகள்**

பெற்ற விடுதலையைப் பேணவும், நாடு முன்னேற்றம் காணவும் இன்றியமையாதது தேசிய ஒருமைப்பாடு என்பதை ஒவ்வோர் இந்தியனும் உணர்தல் வேண்டும். ஒருமைப்பாட்டுக்கு உலை வைப்பன சாதி சமய மொழி வெறிகளே.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வள்ளுவர் வாக்கைச் சிந்தையில் நிறுத்திச் செயற்பட்டால் சாதி வேற்றுமை ஒழியும்; சமூக ஒற்றுமை மலரும்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் திருமூலரின் நெறிமுறையையும்,

**"பாருக்குள் ளேதெய்வம் ஒன்று - இதில்**
**பற்பல சண்டைகள் வேண்டா"**

என்னும் பாரதியின் அறிவுரையையும் ஏற்றுப் போற்றினால் மதவெறி மாளும்; மதநெறி வாழும். எல்லா மொழியினருமே இந்திய விடுதலைக்குப் பாடுபட்டனர். ஆதலால், எல்லா மொழிகட்கும் சமவுரிமை தரப்பெற்றால் மொழிவெறி மறையும்.

**முடிவுரை**

**"இமயச் சாரலில் ஒருவன் இருமினான்**
**குமரி வாழ்பவன் மருந்துகொண் டோடினான்**
**ஒருவர்க்கு வந்தது அனைவர்க்கும் என்ற**
**மனப்பாங்கு வளர்ந்தது வேண்டிய மட்டும்"**

என்ற பாரதிதாசன் கனவு நனவாகட்டும்! இந்திய ஒருமைப்பாடு நிலையாகட்டும்!.

---

## விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு

**முன்னுரை**

வணிக நோக்குடன் வந்த ஆங்கிலேயர் நம் நாட்டையே உரிமையாக்கிக் கொண்டனர். நம்மை அடிமைப்படுத்தியதோடு கொடுமைப்படுத்தவும் தொடங்கினர். அதனால் விடுதலைப் போராட்டம் நாடெங்கும் நிகழ்ந்தது. இதில் தமிழகத்தில் பங்கு தனிச்சிறப்புடையது.

**முதல் முழக்கம்**

வெள்ளையரின் கொடுமையை எதிர்த்து 1790-இல் முதல் முழக்கம் செய்தவர் வீரபாண்டிய கட்டபொம்மன். அவர் தூக்கிலிடப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஊமைத்துரை, வேலு நாச்சியார், மருதுபாண்டியர், பூலித்தேவன், வேலுத்தம்பி எனப் பலர் வெள்ளையரைக் கடுமையாக எதிர்த்து வீரமரணம் எய்தினார். 1806-இல் திகழ்ந்த வேலூர்ச் சிப்பாய்க் கலகம் 1857-இல் நடந்த முதல் இந்திய விடுதலைப் போருக்கு வித்தாக அமைந்தது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



வ.உ.சி

'தென்னாட்டுத் திலகர்' என்று போற்றப்படும் வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராக சுதேசிக் கப்பல் கழகத்தைத் தோற்றுவித்துக் கப்பல் ஓட்டினார்; 'கப்பலோட்டிய தமிழன்' என்ற புகழ் ஈட்டினார்; இரட்டை ஆயுள் தண்டனை பெற்றுச் சிறையில் செக்கிழுத்தார்; கல்லுடைத்தார் எண்ணற்ற இன்னலுற்றார்.

**சுப்பிரமணிய சிவா**

இவர் சிற்றூர்களுக்கு நடந்தே சென்று, பொதுக்கூட்டங்களில் பேசி, மக்களுக்கு வீரவுணர்வு ஊட்டினார். இவர் பேச்சு ஆங்கிலேயரை நிலை கலக்கியது.

**சுப்பிரமணிய பாரதி**

இவர் தம் பாட்டுத் திறத்தால் மக்களுக்கு நாட்டுப் பற்றூட்டி, அச்சம் தவிர்த்து, ஆண்மையோடு போராடும் வழி காட்டினார். நாடு விடுதலை பெறுமுன்பே,

**"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே**
**ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட் டோமென்று"**

என்று பாடி மகிழ்ந்து, நம் உள்ளம் துள்ளச் செய்தார்.

**திருப்பூர் குமரன்**

தோழர்களுடன் தேசியக்கொடி ஏந்தி வந்த இவரை மண்டையில் அடித்து வீழ்த்தினர். இவர் அந்நிலையிலும் கொடி கீழே விழாதவாறு பற்றியிருந்து, 'கொடி காத்த குமரன்' என்னும் பெயரை ஈட்டினார்; புகழை நாட்டினார்.

**சத்தியமூர்த்தி**

இவர் இங்கிலாந்து சென்று ஆங்கிலேயரை எதிர்த்து முழக்கமிட்டார். அதனால் 'சிங்கத்தின் குகைக்குள்ளே சென்று அதன் பிடரியை உலுக்கியவர்' என்னும் பாராட்டைப பெற்றார்.

**வாஞ்சிநாதன்**

அடக்குமுறையாளன் ஆஷ்துரையைச் சுட்டுக் கொன்று, தன்னையும் சுட்டுக்கொண்டு மாண்ட பெருமைக்குரியவன் வீர இளைஞன் வாஞ்சிநாதன்.

**முடிவுரை**

மேலே குறிப்பிடப்பெற்றவர் மட்டுமல்லாமல் பெரியார், காமராசர், இராசாசி, திரு.வி.க., பசும்பொன்முத்துராமலிங்கனார் முதலான பலர் நாட்டு விடுதலைக்காக நனி உழைத்தனர். இவர்களைப் போன்றே நாமும் நாட்டுப்பற்றுடன் வாழ்ந்தால், பெற்ற விடுதலையைப் பேணலாம்; நாளும் முன்னேற்றம் காணலாம்.

---

## வாய்மையே வெல்லும்

**முன்னுரை**

**"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற"**

என்றார் வள்ளுவர். அறங்களுள் தலையாயதும் நிலையாயதும் வாய்மையே என்பதால் அவர் இவ்வாறு கூறியுள்ளார். கதிரவனைச் சில நேரம் கார்முகில் மறைப்பது போல் வாய்மையைச் சில நேரம் சூது கவ்வும். ஆனால், வாய்மையே இறுதியில் வெல்லும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**வாய்மை இலக்கணம்**

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்".**

என்பார் வள்ளுவர். ஆதலால், பிறிதோர் உயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதலே வாய்மையாகும். பிறர்க்குக் குற்றமற்ற நன்மையை விளைக்குமாயின், பொய்யான சொற்களும் வாய்மையின் இடத்தைப் பெறும் என்றும் வள்ளுவர் வகுத்துரைத்துள்ளார்.

**வாய்மையின் சிறப்பு**

தன் உள்ளம் அறியப் பொய்யின்றி நடப்பவன் உலகத்தார் உள்ளங்களிலெல்லாம் இருப்பவனாவான். தன் மனம் பொருந்த உண்மை பேசுபவன் தவமும் தானமும் ஒருங்கே செய்வோரைவிடச் சிறந்தவன். பொய்யில்லா வாழ்க்கை எல்லா அறத்தையும் கொடுக்கும். பிற அறங்களெல்லாம் தரும் பயனைத் தானே தர வல்லது வாய்மை. அதனால்தான்,

**"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று".**

என்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். மேலும், புறத்து இருளைப் போக்கும் ஞாயிறு, திங்கள், தீ முதலியன விளக்குகள் ஆகா; அகத்து இருளை அகற்கும் பொய்யாமையாகிய விளக்கே சான்றோர்க்கு விளக்காகும் என்று கூறி, வாய்மையறத்தினது தலைமையைத் தெளிவு படுத்தியுள்ளார்

**வாய்மை காத்தோர்**

"வில்லுக்கு விசயன்; சொல்லுக்கு அரிச்சந்திரன்" என்பர். மனைவி, மகன், மன்னர் பதவி அத்தனையும் இழந்தான்; சுடுகாட்டுக் காவலனாய் வாழும் இழிநிலை அடைந்தான். அந்த நிலையிலும் பொய் கூற மறுத்து அழியாப் புகழ் பெற்றான் அரிச்சந்திரன். அந்த அரிச்சந்திரனது வாழ்க்கையைச் சித்தரிக்கும் நாடகத்தைக் கண்டு நெகிழ்ந்த அண்ணல் காந்தி அன்று முதல் தம் வாழ்நாள் முழுதும் வாய்மை காத்தார். வாய்மையே வெல்லும் என்னும் உறுதியோடு அமைதி வழியில் போராடி, ஆங்கிலேயரிடமிருந்து நம் நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்தார். 'சத்திய சோதனை' என்னும் தம் வாழ்க்கை வரலாற்று நூலில் வாய்மையின் வெற்றியை விளக்கிக் கூறி உலகப் புகழ் பெற்றார்.

**முடிவுரை**

"சித்திரம் பேசேல்" என்றார் ஔவை. "நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்" என்கிறது உலக நீதி. "பொய்சொல்ல லாகாது பாப்பா" என்றார் பாரதி. "மெய்சொல்லல் நல்லதப்பா" என்றார் பாரதிதாசன். சிந்தை, சொல், செயல் இம்மூன்றிலும் தூய்மை காத்து, உண்மையே உரைப்போம்; நன்மையே விளைப்போம்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## Our Retailers (Book Shops)

| | |
|---|---|
| • **Attur** | : Saraswathi Book Centre - 9443340904. |
| • **Bhavani** | : Dhana Book Company - 04256-230921, |
| | : Lakshmi Stores - 04256-230709. |
| • **Chennai** | : A.R.Book Mart - 9941516187, A.V.M.Stores - 22263213, |
| | : Aashiq Book Centre - 9840492444, Arraba Book Traders - 9884488789, |
| | : Badusha Book Depot - 9677045424, Basha Paper Mart - 9710248730, |
| | : Bell Co - 9444101894, Bismi Publications - 9840399500, |
| | : Books & Books - 9940137153, : Excellent Stationary - 24314100, |
| | : F.A. Stores - 9941966670, Gauttham Book Centre - 9962954948, |
| | : Golden Book House - 9941477870, |
| | : Golden Book House, N.S.K. Nagar - 9790929257, |
| | : Indian Book Centre - 9381175511, |
| | : Indian Book House - 24327784, Jayam Traders, M.G.R.Nagar -9382334454, |
| | : Kamal Store - 24419202, Kings Book House - 25383398, |
| | : Limra Book Centre - 9940039953, M.K.Stores - 25386955, |
| | : M.S.K.Book Centre - 25381002, MR Book Store - 2536 4596, |
| | : New Books & Books - 9940102539, New Golden Book House - 26644095, |
| | : New Mylai Stationers - 9841313062, Nivas - 9840089961, |
| | : New Golden Enterprises - 9791599446, Parrys Book House - 2538 3308, |
| | : Prine Book House- 9840676112, Ravie Agencies - 24941761, |
| | : Ruby Books - 26425958, S.A.Stores - 9940666933, Sriram & Co - 9791186186, |
| | : Sudhaa Store - 9840130040, |
| | : The Purasai Books - 9840068767, |
| • **Chidambaram** | : Jeyam Book Centre - 9786915969, |
| | : Sriram Book Centre - 9486383334. |
| • **Coimbatore** | : Cheran Book House - 0422-2396623, Kannan Puthaga nilayam - 0422-2398890, |
| | : Majestic Book House - 0422-2383055, |
| | : Sri Rajaganapathy Puthaga Nilayam - 94438-92421, |
| | : Radhamani Books - 0422-2392122, Murugan Book Dept - 0422-2396531, |
| | : Vasantham Stores - 0422-2234243, 9843082762 |
| • **Cuddalore** | : Cuddalore Emporium - 944388202028, Bell Book House - 08428745342. |
| | : Indian Book House - 9443079942. |
| • **Dharmapuri** | : Sathees Book Shop - 486015051, Siva Stores - 04342-264068, |
| | : Sri Krishna School Needs - 04342-263347, |
| | : Sri Sathiya Sayi Book House - 9443267210. |
| • **Dindigul** | : Ayyanar book centre - 04512426561, |
| | : KV Narayanalyyar - 04512433753. |
| • **Erode** | : Dhana Book Company - 0424-2221230, Motherland Book House - 0424-2226161, |
| | : Senthil Book Palace - 0424-2214311, Selvam Books - 4243367027, |
| | : Palaniyappa - 0424-2256261. |
| • **Harur** | : Srikalyani Store - 9789966464. |
| • **Hosur** | : Gowri Book Centre - 9443541320. |



www.penguinbooks.in

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- **Kallakurichi** : Sri Kiruba Stationery Shop - 8122457114.
- **Karur** : Book Park - 9944531896,
  : Vani Book Shop - 9443941210,
  : SPN Note books - 04342-262795.
- **Krishnagiri** : Vijaya book centre - 04343-231210.
  : Sri Ramana Book House - 9445060536 / 9025313661
- **Kumbakkonam** : Jaisri Books - 9952882002, Sri Books - 944374884,
  : Sri Markandeya Book Depot - 9488337750, Sri Balaji Books - 9688356093.
- **Kanchipuram** : VBC Books - 044-27228343.
- **Madurai** : Arasu Book Stall - 9865706255, Jayam Book Centre - 9894658036,
  : Mano Book Centre - 0452-2621577, Meenakshi Book Shop - 0452-2627010,
  : Sunmathi Traders - 0452-2338966, Vetri Book Centre - 9843461624, 0452-2627839
- **Mayiladuthurai** : Balaji - 09865768502.
- **Nagapattinam** : Sri Kalaimagal Book Emporium - 9894669926.
- **Nagerkovil** : M.Arumugampillai Book Shop - 04652-230728, M.S Books - 9443744493,
  : Golda Stores - 9791402491.
- **Paramakudi** : Lakshmi Book Center Mdp - 9488022699.
- **Namakkal** : Saravana Books - 097880 14000.
- **Nannilam** : Mullai Book Shop - 072002 42836.
- **Pattukottai** : Arasu Paper Store - 9791950463,
  : Arasi - 043732 57507.
- **Pollachi** : Vasavi Stationaries - 94437-38383.
- **Pondicherry** : Saraswathi Book Stall - 9894440532 / 9500703094, Balaji Book Stall - 9894043457,
  : Saraswathi Book Centre - 9361057339, Selvi Stores - 9488121105,
  : Sri Lakshmi Book Stall - 94430 85499, Sri Saraswathi Book Stall - 9443790398.
- **Perambalur** : Chandra Stores - 9842360332.
- **Rajapalayam** : Sri Durga Stores - 9842168949.
- **Ramanathapuram** : Aruna Stores - 9443491772,
  : Aruna Note Book Stores - 9842537005.
- **Rasipuram** : Sakthi Books - 9443752673,
  : Babu Books - 04287-223159.
- **Salem** : A.K.Chandraiah Chettair & Sons - 9787552233,
  : Ajantha Book Centre - 0427-417755, Kalaivani Book Centre - 2450979,
  : Pattu Book Centre - 98424-28861, Sri Rajaganapathy Cards - 9443006703,
  : The Ajantha Agencies - 0427-2266194, Saraswathi Paper Store - 0427-2211794,
  : Sree Vignesha Book Centre - 0427-4020409, 9150780853.
- **Srivilliputhur** : Aandavar Stores - 94864621 02.
- **Seerkazhi** : Semmalar - 9626506207.
- **Sivagangai** : New Ayyanar Books - 999 4079 013
- **Thanjavur** : L.K.R.Puthaga Nilayam - 04362-2333109,
  : Sri Murugan Publications - 9944144446.
- **Theni** : Maya Super Bazaar - 9500621295,
  : Raja Kai Stores - 253323.

www.penguinbooks.in



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| | |
|---|---|
| • **Thenkasi** | : Maheswari Book Centre - 04633-224406. |
| • **Thiruvanamalai** | : Pichandimudaliar.A - 9443214725, |
| | : Sri Vasavi Stationery & General Store - 94438-85507 |
| • **Thiruvarur** | : Arasu Book Centre - 9443742424, Manonmoney Vilas - 9443491894, |
| | : Anand Papers - 04366-222306, Enbajothy Vilas - 04366-220584 |
| • **Tiruchengode** | : Sri Chola Book House - 9842853949. |
| • **Tirunelveli** | : Padma Book Stall - 0462-2337650, Eagle Books - 0462-2578899, |
| | : Sri Shyamala Puthaga Angadi - 0462-232 2277. |
| • **Tirupattur** | : Sri Sundar Stores - 9486242313. |
